இலவசப் பிரதி Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-17 | 03-11-2005 | வியாழக்கிழமை | ஓசை-259



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:184, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-13211)

# இராணுவ ஒட்டுக்குழுக்களை அகற்றும் கண்காணிப்புக்குழு யோசனை நிராகரிப்பு!

## தமிழ் உளவாளிகள் வலையமைப்பை அழிக்கும் செயல் எனவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் தமிழ் குழுக்களை வடக்குகிழக்கில் இருந்து அகற்றுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு செய்த பரிந்துரையை சிறிலங்கா அரசு நிராகரித்துள்ளது. இதேவேளை இத்தகைய யோசனைவடக்கு கிழக்கில் இருக்கும் தமிழ் உளவாளிகளின் வலையமைப்பை செயலிழக்கச் செய்யும் நோக்கம் கொண்டது என சிறிலங்கா இராணுவ உளவுப் பிரிவு அதிகாரி ஒருவர் குற்றம்சாட்டியும் உள்ளார்.**

சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களை வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அனுமதிக்கக்கூடாது. அவர்களை அப்புறப் படுத்த வேண்டும் என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளர் ஸ்வென ஜெய்பர் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கௌசலயன் கொலை தொடர்பாக விசாரணைகள் நடத்திய சனாதிபதி ஆணைக் குழுவிற்குப் பரிந்துரை செய்திருந்தார். அப்பரிந்துரையை சனாதிபதி ஆணைக்குழுவும் ஏற்றுக் கொண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கில் சிறிலங்காப் படையினர் இரவுவேளை சிவிலுடையில் நடமாட்டம்

### – மக்களின் இயல்பு வாழ்வு பாதிப்பு

வலி.வடக்குப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் பொதுமக்கள் போன்று சிவில் உடையில் இரவு நேரங்களில் நடமாடுகின்றார்கள் இதேநேரம் சீருடையிலும் இவர்கள் ரோந்து வருகின்றார்கள்.

இவர்கள் சிவில் உடையில் நடமாடுவதைக் கண்ட பொதுமக்கள் பலர் இவர்களினால் பலத்த எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப் பட்டுள்ளார்கள். இரவு நேரங்களில் இவர்களின் இத்தகைய நடமாட்டம் பொதுமக்களின் அன்றாட இரவு நேர நடமாட்டங்களை கட்டுப்படுத்தியுள்ளது.சீருடையில் ஒரு பகுதியினர் ஒரு வீதியால் வர, மற்றவர்கள் சிவில் உடையில் குறிப்பிட்ட இடத்தை சென்றடைந்த பின்னர் மீண்டும் பிரிந்து வேறு பாதைகளுக்கு செல்கின்றார்கள். இவர்களுடன் கூடவே ஈ.பி.டி.பி.யினரும் மற்றும் ஆயுத துணைக்குழுக்களும் சென்று வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டிப் பகுதிகளில் இவர்களின் இத்தகைய நடமாட்டங்களைப் பொதுமக்கள் கண்டுள்ளார்கள். இதன் காரணமாக பொதுமக்கள் இரவில் நடமாடு வதை மிகவும் குறைத்துள்ளதுடன், சத்தம் போட்டால் கூட வெளியால் வருவதற்கும் தயக்கம் காட்டும் நிலைமையும் ஏற்பட்டுளள்து

இதனைத் திருடர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. (41)

## அரச ஊடகங்கள் பக்கச்சார்பு; சந்திரிகாவிற்கு ரணில் முறைப்பாடு

சிறிலங்கா அரச ஊடகங்களின் செயற்பாடு குறித்த தமது விசனத்தை வெளிப்படுத்தி சனாதிபதி சந்திரிகாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கடிதம் அனுப்பியுள்ளார்.

சந்திரிகாவிற்கு ரணில் நேற்று புதன்கிழமை அனுப்பிய கடிதத்தில் நாடு முழுவதும் நாம் மேற்கொண்ட பரப்புரைக் கூட்டங்களில் இடம் பெற்ற விடயங்களை ஒளிபரப்ப ரூபவாகினியிலும் ஐரி.என்னிலும் நேரம் ஒதுக்கக் கோரி பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஒருமணி நேரம் முதல் ஒன்றரை மணிநேரம் கோரியிருந்தோம். ஆனால் இதுவரை எமக்கு எதுவிதபதிலும் கிடைக்கப்பெறவில்லை.

ஊடகத்துறை அமைச்சர் மற்றும் சனாதிபதி என்றவகையில் இது

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு வினாயகபுரத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் இனம் தெரியாத நபர்களினால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். கல்குடா விஸ்ணு கோவில் வீதியைச் சேர்ந்த செல்லத்தம்பி புண்ணியமூர்த்தி (வயது -26)என கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக் காலை வீட்டிலிருந்து வங்கிக்குச் சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்துள்ளது.

## ஓயாத அலைகள் –03 வெற்றிவிழா நிகழ்வில் “நெருப்பினுள் நின்று” கவிதை நூல் வெளியீடு



ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் சிறிலங்கா அரசபடைகள் ஆக்கிரமித்த பகுதிகளை மீட்ட ஓயாத அலைகள்-03 வெற்றிச் சமரின் ஆறாம் ஆண்டு வெற்றி விழா நேற்று ஓயாத அலைகள்-03 நடவடிக்கை ஆரம்பமான ஒட்டுசுட்டான் பகுதியில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட மைதானத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச்சுடரினை மாலதிபடையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசா ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தளபதி ரமேஸ் ஏற்றினார். தொடர்ந்து ஓயாத அலைகள்-03இல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி மீளளிப்பு நடைமுறைகள்

கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப் பெற வேண்டும்.

ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் உரித்தாளரின் (யார் சார்பிற் கடன் செலுத்தப்பட்டதோ அவர்) கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதத்துடன் உரித்தாளர் நேரில் வருகை தர வேண்டும்.

கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களை பின்னுரித்தாளர் கொண்டுவரவேண்டும்.

1. இறப்புச் சான்றிதழ், 2. கடன் சான்றிதழ், 3.இறப்புச் சான்றிதழின் நிழற்படி (பிரதி), 4. பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம், 5.பின்னுரித்தாளரின் ஒப்பந்தத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதம்.

கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பயிற்சிபெற்று பக்கத்துணையாக வந்து நின்றபோது தலைவர் ஓயாத அலைகள் –03 ஐ ஆரம்பித்தார்

### ஓயாத அலைகள் -03 வெற்றி நாள் நிகழ்வில் தளபதி ரமேஸ்



ஜெயசிக்குறுவை வழிமறித்திருந்த கட்டத்தில் தேசியத்தலைவர் ஒருதிட்டத்தை வகுத்தார். மக்களுக்குப் பயிற்சியை வழங்கிஅவர்களை காப்பரண்களில் நிறுத்தி விட்டுப் போராளிகள் உள்ளே இறங்கி பிரதேசங்களைக் கைப்பற்றலாம் என்பதே அத்திட்டமாகும். மக்கள் பக்கபலமாக வந்து நின்று எமக்கு தோள்கொடுத்த போது தலைவர் ஓயாத அலைகள் -03ஐ ஆரம்பித்தார் எனத் தளபதி ரமேஸ் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று ஒட்டுசுட்டானில் நடந்த ஓயாத அலைகள் - 03இன் ஆறாவது ஆண்டு வெற்றி விழாவின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இன்றைய நாள் அனைத்து தமிழ்மக்களும் உணர்வு கொள்ளவேண்டிய நாள். ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை வன்னிப் பிரதேசத்தை கூறு போட்டு வவுனியாவினூடாக வந்த இராணுவம் ஆனையிறவுக்குச் சென்று ஏ-9 பாதையைப் பிடிப்பது தான் அதனுடைய திட்டம் இதற்குப்பின்னால் பல திட்டங்களையும் இந்நடவடிக்கை கொண்டிருந்தது. அந்தக் காலப்பகுதியில் சிறிலங்கா அரசாங்கம் தன்னுடைய இராணுவ உயர்வலுவை முழுமையாக பிரயோகித்து அந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு தாக்குதல்களில் ஐந்து படையினர் காயம்

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் நேற்று இடம்பெற்ற நான்கு வெவ்வேறான கைக்குண்டு வீச்சுச்சம்பவங்களில் ஐந்து படையினர் காயமடைந்தனர்.

அச்சுவேலி நகரில் இடம்பெற்ற சம்பவத்தில் சிப்பாய் ஒருவரும் நாவாந்துறையில் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் இரு பொலிசாரும் மற்றும் இரவு 9.30 மணியளவில் வடமராட்சி மாலுச்சந்தியில் இரு படையினரும் காயமடைந்துள்ளனர். இதேவேளை யாழ். குருநகர் சேமக்காலைச் சந்தியில் உள்ள இராணுவக்காவலரண் ஒன்றின் மீது கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# தாயக விடுதலைப் பயணத்தில் அமைதியாய் ஓடிய விடுதலைப் பெரு நதியின்........!

## 2 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



தாயின் மடியில் 20 ❁ 02 ❁ 1972

தாயக மடியில் 03 ❁ 11 ❁ 2003

## மேஜர் அறிவுடைநம்பி/நந்தன்
## (சுப்பிரமணியம்-லோகநந்தன்)
## தம்பலகாமம் திருகோணமலை

அன்போடு பேசிய அழகு முகம் எங்கே?
பண்போடு பழகிய பாச முகம் எங்கே
திருமலை மண் தந்த மாவீரனே
தலைவன் வழிதனில் தினம் உழைத்தோனே
விடுதலை இலட்சியத்தை நெஞ்சிற் சுமந்த
போர்க்கள வாழ்வை தோழில் தாங்கி
தேசத் தலைவன் நினைவுடன் தளரா மனதுடன்
எம் தாய் நில தேசத்தை முத்தமிடும் வரை
கொண்ட இலட்சியத்தில் குறி தவறாது வாழ்ந்து காட்டி
எம் கொள்கைக்கு உரமூட்டிய கொள்கை வீரனே
உம் பாதங்கள் பயணித்த விடுதலைப் பாதையில்
எம் பாதங்களின் பயணம் தொடரும்
இலட்சியத் தலைவனின் வழிதனில் சென்று
சுதந்திர தமிழீழ நாடமைத்திடும் வரை
நந்தன் அண்ணா எனும் நாமம்
எம் நாவில் நிலைபரப்பி ஒலித்திடும்

"புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்"

தகவல்:
நண்பன்
ப. சிந்திரன்

(சி-13201)

---

# பிரதேச செயலகம் – தென்மராட்சி

## கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி 09.11.2005 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் (09.11.2005) 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலையின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவகத்தில் (இக்ராட்) பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் கோருவதற்கு தகைமையுடையவராவர். கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் பத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| தும்புக்கைத்தொழிலுக்கான பொதுச் சேவைகள் மண்டபம் அமைத்தல், அல்லாரை. | ரூபா 24 500.00 | ரூபா 500.00 |

கேள்விகள் இந்தச் செயலகத்தால் வழங்கப்பட்ட படிவத்தில் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு "பிரதேச செயலர், பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு எதிர்வரும் 09.11.2005 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்படிவுப் பணத்தையும் செலுத்தி 07.11.2005 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிவரை வழங்கப்படும் படி வங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விபரங்களை பிரதேச செயலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஸ்ரீநிவாசன்,
தலைவர்,
திணைக்கள கேள்விச்சபை,
பிரதேச செயலகம், தென்மராட்சி.

(சி-13199)

---

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் பின்வரும் பணிநிலைக்குத் தகைமை உள்ளவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை :- தொழில்நுட்ப உத்தியோகத்தர்

அகவை :- 24 வருடங்களிற்கு மேல்

தகைமை :- தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா
NATIONAL DIPLOMA IN TECHNOLOGY (N.D.T)
அல்லது
தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ்
NATIONAL CERTIFICATE IN TECHNOLOGY (NCT)
அல்லது
பட வரைஞர்
DRAUGHTMENSHIP

ஊதியம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி தகைமைகளுக்குச் சமமான கல்வித்தகைமை பட்டறிவு உள்ளவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்.சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக மனிதவளப்பகுதிக்கு 10.11.2005 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

- கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
- பட்டறிவுச் சான்றிதழ்கள்
- நற்சான்றிதழ்கள்
- பிறப்புப் பதிவுப் பொத்தகம்(மூலம்)
- தேசிய அடையாள அட்டை

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-13259)

---

உ

முல்லை மாவட்டம்
தண்ணீரூற்று
ஊற்றங்கரை சித்தி விநாயகர் தேவஸ்தானம்
01.11.2005 நடைபெற்ற



# மாபெரும் அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு

## முடிவுகள்

1 ஆம் பரிசு இல. 3100 ஸ்ரீசுபிதா கனுக்கேணி கிழக்கு முள்ளியவளை.
2 ஆம் பரிசு இல.18626 ரசிந்தன் 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
3 ஆம் பரிசு இல. 17817 சு. புஸ்பமலர் ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு.

### 15 ஆறுதல் பரிசுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 9252 | 6) | 7278 | 11) | 15986 |
| 2) | 18665 | 7) | 12099 | 12) | 4068 |
| 3) | 9930 | 8) | 815 | 13) | 11529 |
| 4) | 8955 | 9) | 11071 | 14) | 2125 |
| 5) | 936 | 10) | 17 | 15) | 19532 |

மேற்படி சீட்டிழுப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. சதாசிவம் கனகரத்தினம் முல்லைமாவட்டம், திரு. அ. வைத்தியநாதஐயா த.மே.நி. சே. உத்தியோகத்தர், திரு.தி.லோகராசா புதிரிகுடா சி. சே. உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது. ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பர்களுக்கும் ஊற்றங்கரை சித்திவிநாயகர் அருள்புரிவார் ஆக!

தேவஸ்தான போசகர்,
பிரதம குரு,
சிவஸ்ரீ இ.ஜெந்தி நாதக்குருக்கள்.

ஊற்றங்கரை சித்திவிநாயகர்,
தேவஸ்தான
பரிபாலனசபை.

(6638)

# தீவிரவாதிகளுடன் சமரசம் வேண்டாம் எச்சரிக்கிறார் ரஷ்ய அதிபர் புட்டின்

(மொஸ்கோ)



உலகத்தை அச்சுறுத்தி வரும் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது. அனைத்து வழிகளிலும், அவர்களுக்குக் கிடைக்கும் ஆதரவை ஒட்ட நறுக்க வேண்டும் என்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

டச்.டி.வி என்ற தொலைக்காட்சிக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கடந்த திங்கள் அன்று பேட்டியளித்தார். அப்போது அவர் தீவிரவாதிகளுடன் எந்த வித பேச்சுவார்த்தையிலும் ஈடுபடக்கூடாது என்று சர்வதேச நாடுகளுக்குக் கோரிக்கை விடுத்தார். பேட்டியின் போது புட்டின் கூறியதாவது:-

தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையோ அல்லது அவர்களை அரசியல் பாதைக்கு வருமாறு அழைப்பு விடுப்பதையோ சர்வதேச சமுதாயம் உடனடியாக நிறுத்த வேண்டும். தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருடன் எந்தவித சமரசமும் செய்யக்கூடாது.

தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து தொலைக்காட்சிகளில் காட்டுவதாலோ அல்லது அவர்களது குறிக்கோள் குறித்து தெரிவிப்பதாலோ பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது. ஆனால் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு ஆதரவு தருவதால் தான் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரிக்கின்றன. இது போன்ற ஆதரவுகளால் தான் இரத்தக்களறியான துன்பச் சம்பவங்கள் சில ஐரோப்பிய நாடுகளில் நடந் தன என்றார்.

# தமது நாட்டில் புகையிரதம் எரிக்கப்பட்ட சம்பவம் திட்டமிட்ட செயல் என்கிறது ஆஜண்டீனா அரசு

ஆஜண்டினாவில் பயணிகள் புகையிரம் தாமதமடைந்ததன் காரணமாக அப்புகையிரதம் எரிக்கப்பட்ட சம்பவம் ஒரு திட்டமிட்ட செயல் என அந் நாட்டு அரசாங்கம் கூறியுள்ளது.

அலுவலகப் புகையிரதம் ஒன்று தாமதமடைந்ததன் காரணமாக ஆவேசமடைந்த பயணிகள் புகையிரதத்தை தீ வைத்து கொழுத்தியுள்ளனர். வன்முறையின் காரணமாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 15 இற்கும் மேற்பட்ட புகையிரதங்கள் மற்றும் கார்கள் சேதமடைந்துள்ளதுடன் ரயில் நிலையத்திலுள்ள இயந்திரங்கள் பலவும் சேதமடைந்துள்ளன. இவ் வன்முறைச் சம்பவமானது திட்டமிட்ட சதிச் செயல் என ஆஜண்டினாவின் உள் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இச் சம்பவத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ளதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய 87 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புகையிரத விபத்துச் சம்பவம் காரணமாக பல வீதிகள் மூடப்பட்டுள்ளதுடன் அங்கு பதற்றம் நிலவி வருகின்றது. அமெரிக்கப் பிராந்திய நாடுகளின் சனாதிபதிகள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு ஆஜண்டினாவில் நடை பெறுவதற்கு சில தினங்கள் உள்ள நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டங்களும், வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன. 2001 ஆம் 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் போது இடம்பெற்ற வன்முறைகளை விட மிகவும் மோசமான முறையில் இந்த வன்முறை இடம்பெற்றுள்ளதாக ஆஜண்டினா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஈராக்கில் பன்னாட்டுப் படைகள் தொடர்ந்திருக்க வேண்டும் என்கிறார் ஜபாரி

(ஐ.நா)

**அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை தங்கள் நாட்டில் அடுத்த ஆண்டு வரை நீடிக்க வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் ஈராக் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஈராக் நாட்டின் பிரதமரான இப்ராகிம் ஜபாரி இது தொடர்பாக 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு கடிதம் எழுதியுள்ளார். கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது,

கடந்த 2004ஆம் ஆண்டு ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை ஈராக்கில் நிறுத்துவதற்கான காலக்கெடு இந்த ஆண்டின் இறுதியில் முடிவடைகிறது.

படைகள் மேலும் நீடிக்க வேண்டுமானால் வரக்கூடிய வாரங்களில் அது பற்றி விவாதித்து முடிவு எடுக்க வேண்டும். அப்போதுதான் 2006ஆம் ஆண்டு சனவரி முதல் திகதி ஈராக்கில் பன்னாட்டுப் படைகள் நீடிக்க முடியும். கடந்த காலம் போலவே ஈராக்கில் பன்னாட்டுப் படைகள் தொடர வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

ஈராக் நாட்டின் தேசிய பாதுகாப்புப் படையில் வீரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகிறது. அதேபோல் வீரர்களின் திறமையும், அனுபவமும் வலுப்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய படையில் உள்ள வீரர்கள் தங்கள் ஆயுதங்கள் மற்றும் கருவிகளை கையாள்வதற்கு மேலும் பல நாட்களாகும். இந்தப் படையால் ஈராக்கில் உள்ள மக்களுக்கு அடிப்படைப் பாதுகாப்பை வழங்க முடியாது. எனவே, பன்னாட்டுப் படைகளை இன்னும் ஒரு ஆண்டு ஈராக்கில் நிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். ஈராக்கில் தற்போது ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பன்னாட்டுப் படையினர் உள்ளனர். இதில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வீரர்கள் அமெரிக்கப் படையினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் பூகம்பத்தில் 17ஆயிரம் குழந்தைகள் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஏற்பட்ட பூகம்பத்தில் ஏராளமான பாடசாலைகள் இடிந்து விழுந்து விட்டன. இதில் பதினேலாயிரம் குழந்தைகள் பலியாகி உள்ளனர். "யுனிசெவ்" நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பில் இந்தத்தகவல் தெரிய வந்துள்ளது.

20 இலட்சம் குழந்தைகள் பூகம்பத்தில் காயமடைந்தும், மனநிலை பாதிக்கப்பட்டும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பூகம்பப் பகுதிகளுக்கு உணவுப்பொருட்கள் போதுமான அளவு விநியோகிக்கப்படவில்லை உணவு கிடைக்காததால் பட்டினிகிடந்து ஒரு பெண் ணும் அவரது இரு குழந்தைகளும் பலியானதாக உலக உணவு நிலையம் தகவல் தெரிவித்துள்ளது.

பூகம்பத்தால் தமது நாட்டைச் சேர்ந்த 57ஆயிரம் பேர் இறந்துள்ளதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கடந்த திங்கட்கிழமை ஈராக்கின் பாஸ்ரா நகரில் இருபது பேர் மரணமாவதற்குக் காரணமான கார்க் குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட காரினை விசாரணைக்காகப் பொலிசார் எடுத்துச் செல்கின்றனர்.

## அமெரிக்க உலங்குவானூர்தி பாகிஸ்தானில் சுட்டு வீழ்த்தப்பட்டது

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தின் இராணுவ உலங்குவானூர்தி ஒன்று பாகிஸ்தான் காஷ்மீர்ப் பகுதியில் ரொக்கட் தாக்குதலுக்குள்ளானது. காஷ்மீரில் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் இருபது அமெரிக்க உலங்குவானூர்திகளில் இதுவும் ஒன்றாகும். காஷ்மீரில் நேற்று முன்தினம் இவ் அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. பாகிஸ்தான் இந்திய எல்லைப் பகுதியிலிருந்து சுமார் பத்து கிலோ மீற்றர் தூரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஏவுகணைத் தாக்குதலுக்கு காஷ்மீர் தீவிரவாதிகளே காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகம் நிலவுகின்றது.



பாகிஸ்தானில் பூகம்ப நிவாரணப் பணிக்காக அமெரிக்கா தன் விமானப் படையைச் சேர்ந்த சீனுக் ரக உலங்குவானூர்திகளை ஈடுபடுத்தி வருகின்றது. அந்த ரகத்தைச் சேர்ந்த உலங்குவானூர்தியையே படத்தில் காண்கின்றீர்கள். நேற்று முன்தினம் பாகிஸ்தான் வான் பரப்பில் வைத்து சுட்டுவீழ்த்தப்பட்ட அமெரிக்க உலங்குவானூர்தியும் இந்த ரகத்தைச் சேர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்கொரிய இராணுவ வாகனத்தில் ஏவுகணை பாகங்கள் வெடித்துச் சிதறியது

(சியோல்)

தென்கொரியாவில் ஏவுகணை பாகங்களை ஏற்றிச் சென்ற இராணுவ வாகனம் வெடித்துச் சிதறியது.

தென்கொரியாவில் தாகு மற்றும் மசான் நகரங்களை இணைக்கும் நெடுஞ்சாலையில் ஏவுகணையின் பாகங்களை ஏற்றிச் சென்ற இராணுவ வாகனம் குகை பாதைக்குள் சென்ற போது திடீரென வாகனத்தை நிறுத்தியபோது அது வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர் என்ற விபரம் தெரியவில்லை. விபத்துக்குள்ளான வாகனம் அமெரிக்க இராணுவத்தினுடையதா? தென்கொரியா வினுடையதா? என்பதும் உறுதிப்படுத்தப்படவில்லை.



தான்சானியா நாட்டில் தேர்தல் வன்முறைகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள நிலையில் வன்முறையில் ஈடுபட்ட கட்சி சார்ந்த ஒருவரை பொலிசார் தாக்கும் காட்சி.

## முதியோர்களைப் பாதுகாக்க ஜப்பானில் புதிய சட்டம்

(டோக்கியோ)

முதியோர்கள் தங்கள் பிள்ளைகளாலும், மற்றவர்களாலும், கொடுமைக்குள்ளாவது ஜப்பானில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் ஜப்பானில் முதியோர்களுக்கெதிராக கொடுமை நடந்ததாக ஆயிரத்து 991 வழக்குகள் பதிவாகியுள்ளன.

ஜப்பானைப் பொறுத்தவரை பெற்றோர்களை மூத்த மகன் தான் கவனிக்க வேண்டும் என்ற வழக்கம் உள்ளது. பிள்ளைகளின் ஆதரவில் வாழ்க்கை நடத்தும் முதியோர்கள் மகனாலும், மருமகளாலும், பல்வேறு கொடுமைக்கு ஆளாகின்றனர். இந்தக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக ஜப்பான் அரசு புதிய சட்டம் இயற்றியுள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறது. முதியோர்களை உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ துன்புறுத்துபவர்களைத் தண்டிக்க புதிய சட்டம் வழி செய்கிறது. முதியோர்களைப் பராமரிக்க மறுப்பவர்கள் அவர்களின் சொத்துக்களைத் தவறாகக் கையாள்பவர்களைத் தண்டிக்கவும் புதிய சட்டம் வழி வருக்கிறது.

# மன்னாரில் வீதிச் சோதனைகள் அதிகரிப்பு போதைப்பொருள் கடத்தல் காரணமாம்

(மன்னார்)

**இந்தியாவில் இருந்து இலங்கைக்கு போதைப் பொருட்கள் மன்னார் தீவினூடாக கடத்தப்படுவது அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளதால், வீதிச் சோதனைகள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக பொது மக்கள் நெருக்கடிகளிற்குள்ளாவது தவிர்க்க முடியாது என சிறிலங்கா பொலிசார் தெரிவிக்கின்றனர்**

.இக் கடத்தல் நடவடிக்கைகள் காரணமாக மன்னார் பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஊர்திகள், பயணிகள் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அத்துடன் மன்னாரில் இருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிச் செல்லும் ஊர்திகளும் திடீர் சோதனைக்கு உள்ளாக் கப்படுகின்றது. இதனால் வெளி மாவட்டங்களிலிருந்து மன்னாருக்கு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

## காணிஉரிமைப் பத்திரங்களுக்கான பாதுகாப்பு உறைகள்

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ வைப்பகத்தினரால் கரைச்சிப்பிரதேச செயலக காணி அலுவலகத்திற்கு காணி உரிமைப் பத்திரங்களை பாதுகாப்பாக வைத் திருப்பதற்கான பாதுகாப்பு உறைகள் கையளிக்கப்பட்டன

தமிழீழ வைப்பக பதில் மேலாண்மை பணிப்பாளர் வினோத் தினால் 650 காணி அனுமதிப்பத்திர பாதுகாப்பு உறைகள் கரைச்சி பிரதேச செயலகத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமையன்று கரைச்சி பிரதேச செயலர் க.சுலோஜினி அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் தமிழீழ வைப்பக ஆளுகை மேலாளர் பாலா மாஸ்ரர், வைப்பக நடுவப் பணியக நிர்வாக உத்தியோகஸ்தர் சுதர்சன், கரைச்சிபிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.சிறிரெங்க நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணி உரிமையாளர்களுக்கு காணி உரிமைப்பத்திரங்கள் மேற்படி பாதுகாப்புறையில் இட்டு கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)




ஒக்ரோபர் -30 சர்வதேச சேமிப்பு தினத்தை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கியினால் சேமிப்பு வார செயற்பாடுகள் இடம்பெற்றது அன்றையதினம் கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் மேற்கொள்ளப்பெற்ற வங்கி நடமாடும் சேவையினை படத்தில் காணலாம். (படம் சோதி)

## பொதுநோக்கு மண்டபம் திறந்து வைப்பு

(ஒட்டுசுட்டான்)

முத்துஐயன்கட்டு வலது கரையில் பொது நோக்கு மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் காலை 11.00 மணியளவில் கிராம அலுவலர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை முத்து ஐயன்கட்டு வலது கரை பாடசாலை அதிபர் பாஸ்கரன் முல்லை- அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சஞ்சீவன் ஆகியோர் ஏற்ற தேசிய கொடியினை முல்லை - மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செல்வம் ஏற்ற மண்டபத்தின் பெயர் பலகையினை குடியேற்ற அதிகாரி பாலேந்திரா திரை நீக்கம்செய்து வைக்க, பொதுமண்டப கட்டட நாடாவினை ஒட்டுசுட்டா[illegible] பிரதேச செயலர் செல்வி சுபா[illegible] கந்தையா வெட்டி திறந்து வைத்தார்.

தொடர்ந்து முதலாவது அறையின் நாடாவினை கமக்கார அமைப்பு தலைவர் சேகரம் வெட்டிதிறந்து வைக்க இரண்டாவது அறையினை முத்துஐயன்கட்டு [illegible] போதனாசிரியர் லக்ஸ்மன் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார். கருத்துரைகளை கிராம தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர்



குமாரலிங்கம், கிராம அலுவலர் மு.சிவனேசன், வலதுகரை பாட சாலை அதிபர்பாஸ்கரன், பிரதேச செயலர் செல்வி சுபாசினி கந்தையா ஆகியோர் வழங்க சிறப்புரையினை முல்லை- மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செல்வம் ஆற்றினார். (05)

## சேருவில-2 மீண்டும் சேவையில்

(திருகோணமலை)

சேருவில-2 கப்பல் மீண்டும் இரண்டொரு தினங்களில் திருகோணமலை-மூதூர் கடல்வழி பயண சேவையில் ஈடுபடுத்தப்பட விருக்கிறது.கடந்த மே மாதமளவில் பழுதடைந்த கப்பல் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப் பட்டு டொக்யார்ட் திருத்தும் தளத்தில் வைத்து பழுதுபார்க்கப்பட்டது. திருத்த வேலைகள் முடிவுற்றதால் இக்கப்பல் மீண்டும் சேவையில் ஈடுபடவுள்ளது. (25)

---

## பெற்றுக் கொள்க!

நாகராசா நற்குணராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் பயண அனுமதி அட்டையும் யாழ்ப்பாணத்தில் அ.காந்தரூபன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி கிளிநொச்சியிலுள்ள ஈழநாதம் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.

---

## 170 ஜெலிக்நைற் குச்சிகளுடன் மன்னாரில் மூவர் கைது

மன்னார் ஊர்மனைப் பகுதியில் சிறிலங்கா படையினரால் மூன்று இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கடந்த திங்கட்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று இளைஞர்களிடம் இருந்து 170 ஜெலிக்நைற் குச்சிகள் கைப்பற்றப்பட்டதாக சிறிலங்கா படையினர் அறிவித்துள்ளார்கள்.

தற்பொழுது இவர்கள் சிறிலங்கா படையினரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

---

## இணைப்பாளர் சந்திப்பு

(புதுக்குடியிருப்பு)

இணைப்பாளர்களுக்கிடையிலான சந்திப்பு த.பு. கழக முல்லை மாவட்டச் செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 இற்கு நடைபெற்றது.

இச்சந்திப்பானது முல்லை மாவட்ட த.பு.கழக பணிப்பாளர் எம்.ஆர். மூர்த்தி தலைமையில் அகவணக்கத்தோடு ஆரம்பமானது. மேற்படி சந்திப்பில் கிராமங்களில் நடைபெறும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. மற்றும் பணிப்பாளரால் இணைப்பாளர்கள் கிராமங்களில் இறங்கி எவ்வாறு வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விரிவாக விளக்கம் கொடுக் கப்பட்டது.இதனைத் தொடர்ந்து இந்த வேலைத் திட்டங்கள் தொடர்பாக த.பு.க உதவி நிறைவேற்றுப்பணிப்பாளர் நீகன் பல விதமான பயன் பெறக் கூடிய கருத்துக்களை கூறினார். இதில் நிறுவனங்களின் இணைப்பாளர் களும் கலந்து கொண்டனர்.(08)

## கட்டாக்காலிகளின் தொல்லையால் பெரும்போகச் செய்கையாளர் பாதிப்பு

(மல்லாவி)

பாண்டியன்குளம் துணுக்காய் பிரதேசத்தில் கட்டாக்காலிகளின் தொல்லைகளால் பெரும்போக செய்கையில் ஈடுபடுவோர் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய் பொதுச்சந்தை பகுதியிலும் மல்லாவி நகர் பகுதிகளிலும் நடமாடும் கால்நடைகள் நகர்ப்பகுதிகளில் உள்ள கடைகளிலும், நடுவீதிகளிலும் இரவில் தங்கி வருவதால் சுகாதார சீர்கேட்டை விளைவிக்கின்றன.



அத்துடன் தற்போது பெரும்போக நெற்செய்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளதால் விளையும் பயிர்களை அழித்து வருகின்றன. இக்கட்டாக் காலி கால்நடைகளை அதன் பராமரிப்பாளர்களினால் பட்டிகள் அமைத்து கட்டி வளர்க்காமையினால் கால்நடைகள் வீதிகளில்தங்கி உறங்கியும் வருவதால் வீதி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. (24)

## நிதி ஒதுக்கியபோதும் வீதி திருத்தப்படவில்லை

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட துணுக்காய்-புத்துவெட்டுவான் பிரதான வீதி திருத்தத்திற்காக வீதி அபிவிருத்தி திணைக்களத்தினரால் பராமரிப்பு நிதியில் பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளபோதும் இற்றை வரையும்இவ் வீதி திருத்தப்படாத நிலையில் காணப்படுகிறது.மேற்படி வீதியினை கீழே உள்ள படத்தில் காணலாம். (24)



## செம்மலை வீதி போக்குவரத்திற்கு உதவாத நிலையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு -செம்மலை வீதி மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. இவ்வீதியினால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை வீதி செப்பனிடப்படாமல் இருக்கின்றது மழைகாலம் ஆதலினால் இவ்வீதியினால் பயணிக்க முடியாத நிலையில் இருப்பதாக பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர். (20)

## துணுக்காய் காவல் பணிமனையினரின் குற்றத்தடுப்பு நடவடிக்கைகள்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு துணுக்காய் காவல் பணிமனையினர் முன்னேற்பாடாக குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை நேற்று முன்தினம் மல்லாவி நகர் பகுதியில் மேற் கொண்டனர்.

இதன்போது வேகக்கட்டுப்பாட்டை மீறி வரும் வாகனங்கள் மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் மீதும், வீதிக்கு இடையூறு விளைவிக்கும் வாகனங்களின் சாரதிகள் மீதும் நடவடிக்கையினை எடுத்ததோடு, வாகனச் சாரதிகளுக்கு வீதி ஒழுங்குகள் பற்றியும் அறிவுறுத்தி னர். (24)



## ஆட்டோ -ஈருருளி விபத்து இளைஞர் படுகாயம்

(நல்லூர்)

சுன்னாகம் பிரதான வீதியில் இடம்பெற்ற ஆட்டோ- ஈருருளிவிபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதன்போது ஆட்டோ தடம்புரண்டு பலத்தசேதத்திற்குள்ளாகியுள்ளது. நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு யாழ்ப் பாணத்தில் இருந்து தெல்லிப்பழை நோக்கி வந்த ஆட்டோவும் இரண்டு ஈருருளிகளும் மோதுண்டதிலேயே இவ் விபத்து இடம் பெற்றது.

இவ்விபத்து சம்பந்தமாக பொதுமக்கள் கருத்து கூறுகையில் ஆட்டோ மிகவும் வேகமாக வந்து நிறுத்த முடியாமல் போகவே இரண்டு ஈருருளிகளையும் மோதி பல தடவைகள் உருண்டு வேலியுடன் மோதியதாக தெரிவித்தனர். தெல்லிப்பழை புளியடியைச் சேர்ந்த 24 வயது இளைஞரே காலில்காயங்களுக்குள்ளானார் இச் சம்பவம் தொடர்பாக சுன்னாகப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார். (41)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை

### –வலயக்கல்விப் பணிப்பாளர் கவலை

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை அடிப்படைவசதிகள் அற்ற நிலையில் பெரும் வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கிவருவதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கவலை தெரிவித்துள்ளார்.**

தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனை தற்போது தனியாருக்குச் சொந்தமான வீடொன்றிலேயே தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இத் தனியார் கட்டடமானது அலுவலகப் பாவனைகளுக்கு ஏற்ற விதத்தில் அமைக்கப்படாது தனியாரின் பாவனைக்குரிய வீடொன்றின் அமைப்பிலுள்ளதால் இங்கு அலுவலக செயற்பாடுகளை நிர்வகிப்பதிலும் அதிகாரிகளுக்கான தனியான அலுவலகங்களை வழங்குவதிலும் பலசிக்கல்கள் உள்ளன.

இதைவிட இங்கு உரிய தளபாட வசதிகளோ, ஊழியர்களோ இல்லா திருப்பதனால் நிர்வாக செயற்பாடுகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள தென்மராட்சி வலயகல்விப்பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன், இந்நிர்வாகச் சிக்கல்களை தீர்ப்பதற்காக தென்மராட்சி வலயகல்விப் பணி மனைக்கு தனியான கட்டடம் அமைக்கப் படுவது அவசியம்என்றும் வலியுறுத்தியுள்ளார். (33)

## போக்குவரத்துச் சபையின்வாள்ஏந்திய சிங்கம்பொறித்த பெயர்ப்பலகை பருத்தித்துறையில் துவம்சம்





(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபையின் வாள்ஏந்திய சிங்கத்துடனான பெயர்ப்பலகை உந்துருளியில் வந்த இனம் தெரியாத நபர்களால் வாளால்வெட்டி துவம்சம் செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த திங்களன்று இரவு 11.30 மணியளவில் உந்துருளிகளில் வந்திறங்கிய பத்துபேர் கொண்ட இனம்தெரியாத இளைஞர்கள் வளால் முட்கம்பி வேலியை வெட்டி உள் நுழைந்து வாளேந்திய சிங்கம் காணப்பட்ட பெயர்ப்பலகையை துவம்சம் செய்யும் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்த டிப்போ காவலாளிகளிடம் வாளைக் காட்டி மிரட்டி தாம் வாள் ஏந்திய சிங்கம் இருப்பதனாலேயே இப் பெயர்ப்பலகையை துவம்சம் செய்வதாக தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெயர்ப்பலகை கடந்த மாதமே திரைநீக்கம் செய்யப்பட்டிருந்தமையும் அன்று 24 மணிநேரத்துள் பெயர்ப்பலகை மீது கழிவுஒயில், பெயின்ற் வகை கொண்டு வாளேந்திய சிங்கம் அழிக்கப்பட்டிருந்ததும் மீண்டும் புதுப்பித்து பெயர்ப்பலகை பொருத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (41)

## புத்தூர் அசம்பாவிதம் குறித்து படையினரிடம் ம.உ ஆணைக்குழு விளக்கம் கோருகின்றது!

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற அசம்பாவிதங்கள்தொடர்பாக பொலிஸ் தரப்பிடமும், இராணுவத்தரப்பிடமும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரியுள்ளது. மேற்படி அசம்பாவிதங்களின் போது, பொலிஸ்படையும், இராணுவமும் நடந்துகொண்ட விதம் தொடர்பாக விளக்க அறிக்கையொன்றை தயார்செய்து அதனை தமக்கு உடனடியாக சமர்ப்பிக்குமாறு இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விளக்க அறிக்கை கோரும் கடிதங்கள் யாழ்.மாட்ட இராணுவத்தளபதி மற்றும் யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட பொறுப்பதிகாரி ரோகித பிரியதர்சனவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி அதிகாலை புத்தூர் கிழக்கில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் அங்கிருந்த பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொள்ள முற்பட்டதன் விளைவாக அங்கு பொதுமக்கள் இராணுவத்தினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இவ்வாறான இராணுவத்தினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களினை அடக்குவதற்காக படையினரும் பொலிசாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது அப்பகுதி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அவர்கள் நடந்து கொண்டுள்ளதாகவும்.

இந்தச் சம்பவங்கள் ஓய்ந்த பின்னரும் அப்பகுதி மக்கள் நிம்மதியாக வாழ்வதற்காக ஏற்ற சூழலைஉருவாக்காது பொலிசாரும் இராணுவமும் மக்கள் மீது அடாவடித்தனங்களை புரிந்து வருவதாகவும்,இதனால் தமது சுதந்திரமானதும், நிம்மதியானதுமான வாழ்வு அச்சுறுத்தலுக்குள்ளாவதுடன் தமது அடிப்படை வாழ்வுரிமை மீறப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டி இப்பகுதி மக்கள் கடந்த திங்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்திருந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ் தரப்பிடமும், இராணுவத்தரப்பிடமும் இது குறித்து விளக்கம் கோரியுள்ளது. (33)

## யாழ்.நகரப்பகுதி உணவகங்களில் சுகாதாரம் சரிவர பேணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் உள்ள உணவகங்களில் பெரும்பாலான வற்றில் உணவுச் சுகாதாரம் சரிவரப் பேணப்படுவதில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டம் முழுவதிலும் உள்ள உணவகங்களின் உரிமையாளர்கள் நடத்துனர்களுக்கு உணவக உணவு பராமரிப்பு முறைகள் பற்றியும், உணவு சுகாதாரத்தைப் பேணுவது பற்றியும் இறுக்கமான அறிவுறுத்தல்களை பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனை வழங்கிவருகின்றது.

எனினும் இவற்றை கவனத்தில் எடுக்காது யாழ். நகரப்பகுதியில் உள்ள உணவகங்கள் பலவும் செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக உணவு பரிமாறும் முறை, உணவை பாதுகாப்பாக வைக்கும்முறை, தயாரிக்கும் முறை, மற்றும் ஊழியர்களுக்கான சுகாதார ஒழுங்கு விதிகள் என்பன சுகாதார திணைக்களத்தால் முறைப்படி அறிவிக்கப்பட்ட நிலையிலும்- இவை இன்னும் யாழ்நகரப்பகுதியில் உள்ள உணவகங்கள் பலவற்றிலும் சரிவரக் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந் நிலைமைதொடர்வதால் தொற்றுநோய் பரவும்அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (33)

## யாழ்.குடாநாட்டில் வீதி அபிவிருத்திக்கான தார் கொள்வனவிற்கு நிதிப்பற்றாக்குறை

### -வீதிஅபிவிருத்தி அதிகாரசபை

யாழ்.குடாநாட்டில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தாரினை கொள்வனவு செய்வதற்கு நிதிப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை கூறியுள்ளது.

வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான தாரினை கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீட்டினை அரசு உரியகாலப் பகுதியில் வழங்காமையினாலேயே இந்த நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது என்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கூறியுள்ளது.

இதன் காரணமாக யாழ்.குடாநாட்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வரும் வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகள் பெரும் பாதிப்படைந்துள்ளன.

இதை விட சில வீதிப்புனரமைப்பு பணிகள் இடையிலேயே கைவிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கவலைதெரிவித்துள்ளனர்.

இந் நிலைமை தொடர்ந்தால் வீதி அபிவிருத்தி பணிகள் பலமுடக்கம் அடையும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

## இடம்பெயர்ந்த மக்களுக்கும் சமுர்த்தி நிவாரணம்; பிழையான நடவடிக்கை-வலி வடக்கு பொதுஅமைப்பு தீர்மானம்

(நல்லூர்)

அரசினால் இடம் பெயர்ந்த மக்களுக்கும் சமுர்த்தி நிவாரணம் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை பிழையான விடயம் என கண்டிப்பதுடன் இடம்பெயர்ந்த மக்களுக்கு தொடர்ந்தும் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரையே வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலிவடக்கு பொது அமைப்புக்கள் ஒன்றியத் தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வலி வடக்கு பொது அமைப்புக்கள் ஒன் றியத் தலைவர் சி.சிவமகாராசா தலைமையில், சமுர்த்தி நிவாரணம் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படுவது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டபோதே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந.சாம்பசிவம் இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களின் சமாசத் தலைவர் ந.கணேஸ் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

சமுர்த்தி முத்திரை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதன் மூலம் பொருளாதார ரீதியாக மேலும் இடம் பெயர்ந்த மக்களை நெருக்கடிக்குள் இட்டுச்செல்லும்.

ஆகையினால் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கு இடம் பெயர்ந்தோர் நிவாரணமே வழங்கப்பட வேண்டும் எனவும் சமுர்த்தி முத்திரை வழங்கப்படுமாக இருந்தாலும் அதனைப் பெற்றுக்கொள்வதில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (41)

## பனை-தென்னை வளஉற்பத்திகளுக்கு ஏற்ற சந்தைவாய்ப்பு இல்லை

### -பனை,தென்னை வள அபிவிருத்திசங்க சமாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனை, தென்னை வள உற்பத்திகளுக்கு ஏற்ற சந்தை வாய்ப்புக்கிட்டு வதில்லை என பனை தென்ன வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விசனம் தெரிவித்துள்ளது. யாழ்.குடாநாட்டில் பனை தென்னைவளப் பொருட் களைப் பயன்படுத்தி சிறப்பான உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப் படுகின்றது.

எனினும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கேற்ற சந்தை வாய்ப்புகளை அரசோ அன்றி அது சார்ந்த அமைப்புக்களோ ஏற்படுத்தாது இருப்பதனால் ஏற்படக்கூடிய நஷ்டங்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக பனை தென்னை வள உற்பத்திப்பொருட்களை தயாரிக்கும் ஏராளமானோர் தமது உற்பத்தி நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளனர்.

இது பனை, தென்னை வள அபிவிருத்தி மேம்பாட்டை மேலும் பாதிப்படையச்செய்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

# சனாதிபதித் தேர்தலில் வெல்லப் போவது யார்?

சனாதிபதித் தேர்தல் இந் நாட்டில் நடப்பதற்கு இன்னும் மூன்று வாரங்கள் உள்ளன. வெற்றிபெற்ற கட்சி தனது பதவிக்காலம் முடியும்வரை ஆட்சி பீடத்தில் இருக்கும். அதேபோல் தோல்வியை தழுவியகட்சி மறு தேர்தல்வரும் வரை எதிர்க்கட்சியாக செயலாற்றும். ஆனால்காலம் சென்றசனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் அமுல் படுத்தப்பட்ட அரசியல் யாப்பின்படி ஆறு வருடங்களுக்கு ஒரு தடவை சனாதிபதித் தேர்தல் நடக்கும். இந்த யாப்பின்படி இரண்டு தடவைகள் ஒருவர் போட்டி இட்டு சனாதிபதியாக முடியும்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வி கண்டால் இவரின் சரித்திரம் முடிந்து விடும். கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டு, சிலர் வெற்றி பெற்ற சனாதிபதி வேட்பாள ரோடு இணைவார்கள். மகிந்த ராஜ பக்ஷ தோல்விகண்டால் அவருக்கும் இதேகதிதான் ஏற்படும். அவரின் கட்சி பல கூறுகளாக பிரிந்து வெற்றி பெற்ற வருடன் பலர்



மகிந்தராஜபக்ஷ



ரணில்விக்கிரமசிங்க

இணைந்து கொள்ளலாம் ரணில் விக்கிரமசிங்க இத்தேர்தலில் வென்றால் முதலாவதாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நாட்டில் பொதுத் தேர்தல் நடக்கும். இத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் வெற்றி பெறுவார். இந்த வெற்றி ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய இரண்டு கட்சி களுக்கும் மரணஅடியாக அமையும். ஜே.வி.பி, பலதொகுதிகளை இழக்கும். அதேபோல் ஜாதிகஹெலஉறுமய கட்சியும் பல தொகுதிகளை இழந்து பரிதாப நிலைக்குத்தள்ளப்படும்.

இத்தேர்தலில் பிரதமர் ராஜபக்ஷ வென்றால் பாராளுமன்றத்தை கலைப் பதற்கு அவசியம் ஏற்படாது. அவசியம் ஏற்பட்டால் ஜாதிக ஹெலஉறுமய கட்சியை இணைத்து கொண்டு ஆட்சி நடத்த முடியும். அதேநேரத்தில் ராஜபக்ஷ ஜே.வி.பியையும், ஜாதிகஹெலஉறுமய கட்சியையும் பலவீனப்படுத்தி சுதந்திர கட்சியை பலப்படுத்த வேண்டுமானால் பாராளுமன்றத்தை கலைத்து விட்டு பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும். மகிந்த ராஜபக்ஷ இத் தேர்தலில் வென்றால் நாட்டிற்கு செய்யப் போகும் திட்டங்களை உடனடியாக அவரால் அமுல்படுத்த முடியாது. ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய கட்சிகளுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி அவர்களை திருப்தி படுத்தவேண்டும். அவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டங்களை முன்வைக்க வேண்டும். அதேநேரத்தில் அவர்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை ரத்துச் செய்து ஆட்சி நடத்தும் அதிகாரம் மகிந்த ராஜபக்ஷ வுக்கு உண்டு. அப்படி ராஜபக்ஷ செயற் படுவாரானால் ஜாதிக ஹெலஉறுமய ஜே.வி.பி ஆகிய இரண்டு கட்சி களுக்கும் அவரை எதிர்க்கும்.

அதாவது இரண்டு கட்சிகளின் எதிர்ப்புக்களை இவர் சம்பாதித்து கொள்ள நேரிடும். அதாவது ரணில் விக் கிரமசிங்க இத்தேர்தலில் வெற்றி கண்டால் அவரின் அரசியல் நடவடிக் கைகள் யாவும் உடனடியாக மக்களுக்கு அறிவிக்கப்படும்.

பாராளுமன்றத்தில் தனது அதிகாரத்தைப் பலப்படுத்தி தனிஆட்சி நடத்துவதற்கு அவர் கட்டாயமாக பொதுத் தேர்தலை கடத்த வேண்டும். இத்தேர்தலில் ஜாதிகஹெல உறுமய ஜே.வி.பி ஆகிய இரண்டு கட்சி களையும் அரசியல் ரீதியில் பலவீனப் படுத்துவது மிக அவசியமாகும். இனவாதிகளின் ஆதிக்கத்தை பலவீனப் படுத்தி தனது பெரும்பான்மையை நிரூபித்து தனியாக ஆட்சியை நடத்தாமல் சிறிலங்கா சுதந்திரகட்சியையும் இணைத்துக் கொண்டு கூட்டு அரசாங்கம் ஒன்றை நடத்தும் கட்டத்திற்கு ரணில் விக்கிரமசிங்க தள்ளப்படலாம். அப்படி அவர்சிறிலங்கா சுதந்திரக்கட்சியை இணைத்துக் கொண்டு ஆட்சிஅமைத்தால் பாராளுமன்றத்தில் இவரை எதிர்ப்பதற்கு எவரும் முன்வர மாட்டார்கள். ரணிலின் சமீபத்திய நடவடிக்கைகள் இதை உறுதி செய்துள்ளன.

இத்தேர்தலில் நிச்சயமாக ரணில் வெற்றி பெறுவார். ஐக்கியதேசியக்கட்சி வெற்றி பெற்றபின் நடக்கும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஜே.வி.பி தனித்து போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்படும். இத் தேர்தலின் பொழுது ஜே.வி. பிக்கும் கணிசமான ஆசனங்கள் குறையும். ஜே.வி.பி பலவீனம் அடையும் பொழுது கட்சிக்குள் பல பிரச்சினைகள் ஏற்பட்டு தலைமைப் பீடத்தை மாற்றும் நிலைக்கு ஜே.வி.பி தள்ளப்படும். ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து கொண்டபடியால் இந்த இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்குமிடையில் நெருங்கிய ஒற்றுமை ஏற்பட்டது. ஆகையினால் ஐக்கியதேசியக்கட்சி கடந்த தேர்தலில் தோல்வியை தழுவிக் கொண்டதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆ யைய கை றியது.



அத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 45.6% வாக்குகளை பெற்றது. முழுமையான வாக்குகள் இத் தேர்தலில் இவர்களுக்கு கிடைக்கவில்லை. அப்படி கிடைத்திருந்தால் இதைவிட அதிகப் பெரு பான்மையுடன் வெற்றி பெற்றிருப்பார்கள். ஐந்து இலட்சம் வாக்குகளை இத்தேர்தலில் இவர்கள் இழந்துள்ளார்கள். 2001ம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலின் பொழுது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 3,330,815 வாக்குகளும், ஜே.வி.பியினருக்கு 815,333 வாக்குகளும் கிடைத்தது. மேலும் ஜே.வி.பி-சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒப்பந்தம் செய்து கொண்டபின் 2004 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலின் பொழுது இரண்டு கட்சிகளும் 4,223,970 வாக்குகளை மட்டுமே பெற்றது. அதாவது 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பொழுது ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் தனித்தனியாக போட்டி இட்டு பெற்ற வாக்குகளும், 2004 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டு தேர்தலில் பெற்ற வாக்குகளும் சமமாக உள்ளதை எம்மால் காணமுடிகின்றது. இத்தேர்தலில் இவர்களுக்கு வாக்குகள் அதிகரிக்கவில்லை.

முன்னைய அரசின் கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தால்



அவர்களுக்கு கணிசமான வாக்குத் தொகைகள் அதிகரிக்கும். அந்த ஆட்சியில் மக்களின் குறைபாடுகள் கவனிக்கப்படாவிடில் இம்முறை தேர்தலின் பொழுது அக்கட்சிக்கு வாக்குகள் அதிகரிக்காது. மிக குறைவாகவே கிடைக்கும். ஐக்கிய தேசிய முன்னணி அரசு 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பொழுது 4,086,026 வாக்குகளை பெற்றது. ஆனால் 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 3,504,200 வாக்குகளை மட்டுமே பெற்றது. அத்தேர்தலில் ஐக்கியதேசிய கட்சிக்கு குறைந்துள்ள வாக்குகளை 2004 ஆம்ஆண்டு பொதுத் தேர்தலின் பொழுது ஜாதிக ஹெல உறுமயகட்சி பெற்றது. ஜாதிக ஹெல உறுமய 5,52,724 வாக்குகளும் 2004 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு குறைந்துள்ள வாக்கு எண்ணிக்கைக்கு சமமாக உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை களில் விரக்தி அடைந்தவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களிக் காமல் ஜாதிக ஹெலஉறுமய கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அத்தேர்தலில் வாக்களித்தவர்கள் இம்முறை சனாதிபதித் தேர்தலில் இரண்டு வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்ற பிரச்சினையும் கிளம்பியுள்ளது.

இம்முறை சனாதிபதித் தேர்தலில் விடுதலைப்புலிகள் எந்த வேட்பாளரை ஆதரிக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி இன்னும் திட்டவட்டமாக கூறவில்லை. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 6,33,654 தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர். அதற்கு முன்னைய தேர்தலின் பொழுது,348,164 தமிழ் மக்களின் வாக்குகளும் கிடைத்தன. வாக்கு எண்ணிக்கையை அதிகரிப்பதும் குறைப்பதும் விடுதலைப்புலிகளின் கைகளில்தான் தங்கியுள்ளது. விடுதலைப்புலிகள் இரண்டு வேட்பாளர்களில் யாரை ஆதரிக்கப் போகிறார்கள் என்று இன்னும் தெளிவாக கூறவில்லை.சிலவேளைகளில் விடுதலைப்புலிகள் நடுநிலை வகிக்க இடமுண்டு. அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்காது. ஆகவே மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு இது வழிவகுக்கக்கூடும்.

ராவய சிங்களநாளிதழ்
சேகர,
மொழியாக்கம்,
அ.சக்திவேல்.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

### சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

யா/சா/6201திரு.செல்லப்பா அப்புத்துரை.
யா/சா/6222திருமதி.சிவக்கொழுந்துசெல்வரத்தினம்.
யா/சா/6275திரு.ஆறுமுகம் வேலாயுதபிள்ளை.
யா/சா/6281திரு.வேலன் முருகேசு.
யா/சா/6283திருமதி.கனகம்மா வல்லிபுரம்.
யா/சா/6308திரு.பொன்னையா பொன்னுத்துரை.
யா/சா/6309திரு.நடேசு சுப்பிரமணியம்.
யா/சா/6344திருமதி.மப்றேஸ் மரிய அருளானந்தம்
யா/சா/6349திரு.கந்தையா வீரசிங்கம்.
யா/சா/6388திருமதி.கனகம்மா பரமசாமி.
யா/சா/6406திருமதி.கனகம்மா குழந்தைவேலு.
யா/சா/6420திருமதி.நாகம்மா கந்தசாமி.
யா/சா/6430திரு.கணபதி மயில்வாகனம்.
யா/சா/6435திருமதி.மோகனாம்பிகை கனகசபாவதி.
யா/சா/6466திரு.வேலுப்பிள்ளை மார்க்கண்டு.
யா/சா/6482திரு.சின்னவன் கதிரவேலு.
யா/சா/6507திருமதி.குஞ்சி முத்துலிங்கம்.
யா/சா/6515திரு.சடையன் சாணையன்.
யா/சா/6531திரு.வெள்ளையன் கதிரன்.
யா/சா/6590திரு.வேலன் கதிரவேலன்.
யா/சா/6640திருமதி.செல்லம்மா மாணிக்கம்.
யா/சா/6664திரு.பரமநாதர் செல்வராசா.
யா/சா/6678திருமதி.செல்வதி பரமசிவம்.
யா/சா/6681திரு.வல்லிபுரம் பாலசுந்தரம்.
யா/சா/6695திருமதி.சரஸ்வதி இரத்தினம்.
யா/சா/6718திருமதி.அரியமலர் எமேசன்.
யா/சா/6736திரு.வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்.
யா/சா/6778திரு.பண்டாரி கந்தன்.
யா/சா/6816திருமதி.பொன்னம்மா தாமோதரம்பிள்ளை.
யா/சா/6871திரு.வல்லி நாகமுத்து.
யா/சா/6933திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
யா/சா/6956திருமதி.இலட்சுமி வேலுப்பிள்ளை.
யா/சா/7015திரு.நாகமுத்து இராசேந்திரம்.
யா/சா/7076திருமதி.மதுரசிகாமணி துரைராசா.
யா/சா/7085திருமதி.பூரணம் சின்னையா.
யா/சா/7166திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/7222திருமதி.குஞ்சம்மா ஆறுமுகம்.
யா/சா/7229திருமதி.செல்லம்மா செல்வன்.
யா/சா/7319திருமதி.நாகம்மா வேலாயுதம்.
யா/சா/7326திரு.தாண்டவி கந்தையா.
யா/சா/7340திருமதி.நாகமுத்து சங்கரப்பிள்ளை.
யா/சா/7356திரு. வேலுப்பிள்ளை ஜெயரட்ணம்.
யா/சா/7373திருமதி.விமலாதேவி பாலசுப்பிரமணியம்.
யா/சா/7388திரு.ஐயங்கன் வாரித்தம்பி.
யா/சா/7403திரு.கந்தையா குணபாலசிங்கம்.
யா/சா/7430திரு.செல்வன் இராசையா.
யா/சா/7433திரு.கணபதிப்பிள்ளை துரைராசா.
யா/சா/7445திரு.சடையன் பொன்னன்.
யா/சா/7499திரு.சின்னப்பொடியன் இராமன்.
யா/சா/7505திரு.தம்பையா கார்த்திகேசு.
யா/சா/7524திருமதி.சின்னம்மா வீரகத்தி.
யா/சா/7558திரு.சின்னத்தம்பி கிருஸ்ணன்.
யா/சா/7561திரு.நாகராசா தற்பரானந்தம்.
யா/சா/7573திரு.வல்லிபுரம் மாணிக்கவாசகர்.
யா/சா/7623திருமதி.முத்துப்பிள்ளை கதிர்காமு.
யா/சா/7632திரு.சின்னையா முத்துத்தம்பி.
யா/சா/7648திருமதி.அன்னப்பிள்ளை வல்லிபுரம்.
யா/சா/7699திருமதி.யோகம்மா மாணிக்கம்.
யா/சா/7768திருமதி.கமலாதேவி நடராசா.
யா/சா/7769திருமதி.மீனாட்சிப்பிள்ளை குமாரவேலு.
யா/சா/7783திருமதி.கண்மணி அருச்சுனன்.
யா/சா/7786திரு.காசிப்பிள்ளை கந்தசாமி.
யா/சா/7798திரு.இராசையா தம்பிராசா.
யா/சா/7810திரு.பொன்னம்பலம் சரவணப்பெருமாள்.
யா/சா/7811திருமதி.மேரிசெபரத்தினம் கந்தசாமி.
யா/சா/7814திருமதி.தங்கம் தருமலிங்கம்.
யா/சா/7827திருமதி.மங்கையற்கரசி கனகசபை.
யா/சா/7856திருமதி.விசாலாட்சி பசுபதி.
யா/சா/7897திருமதி.பிலோமினா தியாகராசா.
யா/சா/7939திரு.சடையன் சின்னத்தம்பி.
யா/சா/7943திருமதி.புவனேஸ்வரி கந்தையா.
யா/சா/7949திரு.மனுவேற்பிள்ளைசெல்வராசா அந்தோனிப்பிள்ளை.
யா/சா/7965திரு.பரமு வேலுப்பிள்ளை.
யா/சா/7980திரு.வேலன் இரத்தினம்.
யா/சா/8013திரு.மாக்கோப்பு மனுவேற்பிள்ளை.
யா/சா/8021திரு.கணபதிப்பிள்ளை கனகசுந்தரம்.
யா/சா/8063திருமதி.இராசம்மா பசுபதி.
யா/சா/8065திருமதி.யோகவதி தம்பு
யா/சா/8084திருமதி.நல்லம்மா நடேசபிள்ளை.
யா/சா/8108திரு.நல்லம்மா குமாரசாமி.
யா/சா/8151திரு.சின்னையா இராமு.
யா/சா/8156திரு.வேலுப்பிள்ளை கந்தையா.
யா/சா/8157திரு.சின்னவன் சின்னப்பு.
யா/சா/8160திரு.கணபதி வேலுப்பிள்ளை.
யா/சா/8170திரு.கைலாயர் வேலாயுதர்.
யா/சா/8201திரு.சுப்பு முருகர்
யா/சா/8205திரு.வீரகத்தி கணபதிப்பிள்ளை.
யா/சா/8230திரு.கந்தையா பொன்னுத்துரை.
யா/சா/8231திரு.வல்லிபுரம் ஞானசேகரம்.
யா/சா/8252திருமதி.மகேஸ்வரி சரவணமுத்து.
யா/சா/8267திருமதி.சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/சா/8301திரு. இராயப்பு மரியநாயகம்
யா/சா/8306திரு.தாமோதரம்பிள்ளை வையித்திலிங்கம்.
யா/சா/8335திருமதி.நாகம்மா வாரித்தம்பி.
யா/சா/8360திருமதி.சரஸ்வதி பாலசிங்கம்.
யா/சா/8386திரு.செல்லையா தருமலிங்கம்.
யா/சா/8441திரு.எட்வேட் நீக்கலெஸ்.
யா/சா/8460திருமதி.நாகம்மா சபாபதி.
யா/சா/8461திரு.செல்லையா தியாகராசா.
யா/சா/8465திரு.கணபதி முருகன்.
யா/சா/8468திரு.மினாசி வாரி.
யா/சா/8490திரு.நாகன் சுப்பன்.
யா/சா/8522திருமதி. புவனேஸ்வரி கார்த்திகேசு.
யா/சா/8597திரு.வேலுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/சா/8598திருமதி.ஜோசப்பினஜோசப் செல்லப்பிள்ளை.
யா/சா/8604திருமதி.மேரிகெலன் அமிர்தநாதன்.
யா/சா/8616திருமதி.பரமேஸ்வரி சச்சிதானந்தம்.
யா/சா/8618திரு.சின்னததம்பி செல்லத்துரை.
யா/சா/8632திரு.கோவிந்தர் நாகலிங்கம்.
யா/சா/8661திருமதி.நாகம்மா வல்லிபுரம்.
யா/சா/8709திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
யா/சா/8711திருமதி.செபபாக்கியம் கிறேகரிஅன்பு.
யா/சா/8822திரு.சுப்பையா அரியரத்தினம்.
யா/சா/8846திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை.
யா/சா/8963திரு.சின்னத்தம்பி கந்தையா.
யா/சா/9095திரு. தம்பிப்பிள்ளை இராசரத்தினம்.
யா/சா/9108திருமதி.சிவபாக்கியம் தில்லையம்பலம்.
யா/சா/9112திருமதி.சோதி கதிரவேலு.
யா/சா/9145திருமதி.இரத்தினபூபதி கனகசபாபதி.
யா/சா/9170திரு.வரப்பிரகாசம் அகுஸ்த்தீன்.
யா/சா/9176திருமதி.பொன்னம்மா தம்பு.
யா/சா/9181திருமதி.பவானி பாலசுந்தரம்.
யா/சா/9202திருமதி.தங்கம்மா குருநாதபிள்ளை.
யா/சா/9238திருமதி.பாறி சடையன்.
யா/சா/9262திரு.சின்னத்தம்பி யோகநாதன்.
யா/சா/9332திரு.கந்தையா கார்த்திகேசு.
யா/சா/9342திருமதி.பொன்னம்மா இராமலிங்கம்.
யா/சா/9415திரு.சின்னையா இராசநாயகம்.
யா/சா/9416திருமதி.அன்னம்மா தர்மன்.
யா/சா/9495திருமதி.சின்னத்தங்கம் சிவஞானசுந்தரம்.
யா/சா/9510திரு.செல்லையாசிவக்கொழுந்து
யா/சா/9582திருமதி.கமலாம்பிகை துரையப்பா.
யா/சா/9625திருமதி.மகேஸ்வரி தம்பிராசா.
யா/சா/9638திரு.மரியாம்பிள்ளை கிறிஸ்ரோப்பர்.
யா/சா/9647திரு.நாகலிங்கம் கோபாலசிங்கம்.
யா/சா/9655திருமதி.நாகேஸ்வரி கந்தையா.
யா/சா/9686திரு.சின்னப்பொடியன் கந்தன்.
யா/சா/9751திரு.நாகமுத்து நாகலிங்கம்.
யா/சா/9762திரு.இராமலிங்கம் பத்மநாதன்.
யா/சா/9790திரு.வைத்திலிங்கம் கனகலிங்கம்.
யா/சா/9874திரு.கனகசுந்தரம் கனகராசா.
யா/சா/9930திரு.நன்னி சடையன்.
யா/சா/10189திரு.செல்லத்துரை இராசையா.
யா/சா/10190திரு.இளையதம்பி கனகரட்ணம்.

### கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

யா/க/1திரு.கந்தன் ஆழ்வான்.
யா/க/44திரு.கந்தப்பு விசுவலிங்கம்.
யா/க/46திருமதி.சீதேவி கிட்ணனன்.
யா/க/74திருமதி.கண்ணகை கந்தப்பு.
யா/க/101திருமதி.கண்ணகை சுப்பிரமணியம்.
யா/க/108திரு.சின்னத்தம்பி வல்லிபுரம்.
யா/க/182திரு.ஆழ்வான் வீரன்.
யா/க/236திரு.கனகசபை சிவபாதசுந்தரம்.
யா/க/246திருமதி.பார்வதி சின்னத்தம்பி.
யா/க/263திரு.கணபதி வல்லிபுரம்
யா/க/276திருமதி.லெட்சுமி நடராஜா.
யா/க/281திரு.பிள்ளையினான் நல்லதம்பி
யா/க/284திரு.இயக்கோமுத்துஜோட்ஜ் அரியநாயகம்.
யா/க/311திருமதி.இலட்சுமி சபாநாதன்.
யா/க/339திரு.மைக்கேல் யேசேப்பு ஆசீர்வாதம்.
யா/க/354திருமதி.விசாலாட்சி சுப்பிரமணியம்.
யா/க/361திருமதி.நல்லம்மா தர்மலிங்கம்.
யா/க/365திருமதி.லட்சுமி செல்லத்துரை.
யா/க/404திருமதி.இலக்சுமி இராமநாதன்.
யா/க/411திரு.ஆழ்வார் சண்முகம்.
யா/க/439திரு.சின்னவன் கந்தசாமி.
யா/க/446திரு.வேலுப்பிள்ளை ஆறுமுகம்.
யா/க/526திருமதி.இரத்தினம் வீரகத்தி.
யா/க/583திரு.வேலுப்பிள்ளைவைத்திலிங்கம்.
யா/க/603செல்வி.சிவகலா பொன்னம்பலம்.
யா/க/622திருமதி.பத்மாவதி தங்கராசா.
யா/க/629திருமதி.அற்புதமலர் சிவசம்பு.
யா/க/645திருமத.சோதி வீரகத்தி.
யா/க/694செல்வி.மகேஸ்வரி மயில்வாகனம்.
யா/க/703திரு.பொன்னையா உருத்திரராசா.
யா/க/709திரு.ஆழ்வார் சோமலிங்கம்.
யா/க/727திருமதி.மகாலட்சுமி அன்னலிங்கம்.
யா/க/761திருமதி.இராசபூபதி சிவலிங்கம்.
யா/க/881திருமதி.அம்பிகை சுப்பிரமணியம்.
யா/க/882திரு.நாகப்பர் வேலாயுதம்.
யா/க/917திருமதி.மகேஸ்வரி வல்லிபுரம்
யா/க/1010திருமதி.வாசுகி கருணானந்தம்
யா/க/1049திருமதி.பாக்கியம் கிருஷ்ணபிள்ளை.
யா/க/1091திருமதி.பரமேஸ்வரி வேலுப்பிள்ளை
யா/க/1138திரு.பொன்னையா வேலாயுதம்.
யா/க/1149திருமதி.ஜெயராணி இராஜசிங்கம்.
யா/க/1166திரு.வேலுப்பிள்ளை வீரவாகு.
யா/க/1179திரு.சுப்பிரமணியம் செல்லத்தம்பி.
யா/க/1189திருமதி.தெய்வானை நாகலிங்கம்.
யா/க/1210திருமதி.இராசம்மா தியாகராஜா.
யா/க/1280திரு.சின்னத்தம்பி இராமகிருஷ்ணராசா.
யா/க/1299திரு.தம்பிப்பிள்ளை இராசலிங்கம்.
யா/க/1305திருமதி.மனோன்மணி ஏரம்பசர்மா.
யா/க/1314திரு.யோன் சண்முகம் கிறிஸ்ததாஸ்.
யா/க/1351திரு.துரைச்சாமி ஜெயபாலன்.
யா/க/1353திரு.வெள்ளையன் சேனாபதி.
யா/க/1368திரு.கந்தையா ஆறுமுகம்.
யா/க/1374திரு.வேலுப்பிள்ளை நடராசா.
யா/க/1378திருமதி.பொன்னம்மா நாகலிங்கம்.
யா/க/1386திரு.கிருஷ்ணபிள்ளை சுப்பிரமணியம்.
யா/க/1418திருமதி. சிவக்கொழுந்து திருநாவுக்கரசு.
யா/க/1439திரு.பொன்னையா தியாகராசா.
யா/க/1452திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/1466திரு.நாகலிங்கம் சந்திரசேகரம்.
யா/க/1467திரு.நாகலிங்கம் சந்திரசேகரம்.
யா/க/1480திரு.சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை.
யா/க/1485திரு.செல்லப்பா செல்வராசா.
யா/க/1503திரு.சிதம்பரப்பிள்ளை கதிரவேல்.
யா/க/1520திரு.கந்தையா கணபதிப்பிள்ளை.
யா/க/1541திருமதி.நளாயினி தங்கவேல்.
யா/க/1542திருமதி.நகுலாம்பிகை பொன்னம்பலம்.
யா/க/1591திருமதி. மங்களேஸ்வரி மாணிக்கவாசகர்.
யா/க/1608திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/1625திரு.அம்பலவாணர் சச்சிதானந்தமூர்த்தி.
யா/க/1649திரு.கணபதிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/1654திருமதி.பூரணம் சுப்பையா.
யா/க/1656திருமதி.அன்னம்மா நடராசா.
யா/க/1667திருமதி.செல்லம்மா இராசையா.
யா/க/1695திரு.வல்லிபுரம் சோமசுந்தரம்.
யா/க/1720திருமதி.மனோன்மணி கந்தவனம்.
யா/க/1729திருமதி. மீனாட்சியம்மா இராசபுத்திரன்.
யா/க/1742திரு.பொன்னையா சின்னத்தம்பி.
யா/க/1744திரு.கார்த்திகேசு கந்தப்பு.
யா/க/1748திருமதி.அசுபதி கிட்டிணன்.
யா/க/1751திருமதி.இராஜேஸ்வரிசிவசிதம்பரம்.
யா/க/1789திருமதி. மாணிக்கம் வைத்திலிங்கம்.
யா/க/1792திரு.செல்லையா திருச்செல்வம்.
யா/க/1802திருமதி. அமலோற்பவ இரத்தினாவதி இராசநாயகம்.
யா/க/1817திருமதி.செல்லம்மா கணபதிப்பிள்ளை.
யா/க/1823திரு.கந்தையா வீரகத்தி.
யா/க/1826திரு.கதிரேசு வேலாயுதம்.
யா/க/1872திரு. வைத்திலிங்கம் குலராசசிங்கம்.
யா/க/1876திரு. வேலுப்பிள்ளை மகேஸ்வரன்
யா/க/1889திருமதி. நல்லம்மா நாகலிங்கம்.
யா/க/1908திருமதி. சின்னப்பிள்ளை முத்தையா.
யா/க/1911திரு. வைரமுத்து நல்லராசா.
யா/க/1944திருமதி. பத்மாசினி சாரங்கபாணி.
யா/க/1947திரு. கதிரேசு நவரத்தினம்.
யா/க/1962செல்வி. அருட்செல்வி அம்பலவாணன்.
யா/க/1972திருமதி. சரஸ்வதி சிவலிங்கம்.
யா/க/1983திரு. செல்லையா மார்க்கண்டு.
யா/க/2027திருமதி. திலகவதி கந்தசாமி.
யா/க/2094திரு. மகாகணபதிகுருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்.
யா/க/2133திருமதி. தேவகி நீலகண்டன்.
யா/க/2174திருமதி. பெரியம்மா நல்லதம்பி.
யா/க/2197திரு. சிவகுரு சிவபாதசுந்தரம்.
யா/க/2207திரு. வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்.
யா/க/2218திரு.வயிரமுத்து பொன்னுத்துரை.
யா/க/2221திரு.வைரமுத்து செல்வராஜா.
யா/க/2233திரு.இராமலிங்கம் தம்பிராசா.
யா/க/2239திருமதி.சிவநாயகி கந்தசாமி.
யா/க/2243திரு.இராமலிங்கம் பரமசாமி.
யா/க/2247திரு.முத்து இளையதம்பி.
யா/க/2253திருமதி.மகாலட்சுமி அப்பாசாமி
யா/க/2269திரு.சண்முகம் ஆறுமுகம்.
யா/க/2308திரு.தியாகராசா சதாசிவம்.
யா/க/2312திரு.மாணிக்கம் வேலும்மயிலும்
யா/க/2363திரு.சின்னையா சண்முகம்.
யா/க/2375திருமதி.மகேஸ்வரி துரைச்சாமி.
யா/க/2378திரு.துரைசிங்கம்குலேந்திரராசா.
யா/க/2390திருமதி.மாசிலாமணிதுரைச்சாமி.
யா/க/2405திரு.சுந்தரம்பசுபதி.
யா/க/2410திருமதி.அன்னலட்சுமிஅம்மா இராசையா.
யா/க/2417திருமதி.இராசம்மா ஜெகநாதன்.
யா/க/2422திரு.கந்தசாமி கிருஷ்ணசாமி.
யா/க/2423திருமதி.கனகேஸ்வரி பாலசுப்பிரமணியம்.
யா/க/2444திரு.வல்லிபுரம் இரத்தினசிங்கம்.
யா/க/2470திரு.முத்துசாமி தங்கராசா.
யா/க/2477திருமதி.குணேஸ்வரி உதயசீலன்.
யா/க/2485திரு.சின்னையா சின்னராசா.
யா/க/2495திருமதி.காந்திஅம்மா சாமிநாதன்.
யா/க/2501திருமதி.செல்வன்காசிப்பிள்ளை.
யா/க/2517திருமதி.நேசரத்தினம் குணரத்தினம்.
யா/க/2523திருமதி.இரத்தினம் கதிரவேலு.
யா/க/2524திரு.துரைச்சாமி கந்தவனம்.
யா/க/2537திரு.செல்லக்குட்டி இராமசாமி.
யா/க/2538செல்வி.வளர்மதி கிருஷ்ணபிள்ளை.
யா/க/2556திரு.சின்னவி மகாலிங்கம்.
யா/க/2568திரு.சீனியர் கோபாலு.
யா/க/2572திரு.ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/க/2574திரு.சின்னத்துரை தர்மலிங்கம்.
யா/க/2589திரு.கிருஷ்ணபிள்ளை யோகானந்தம்.
யா/க/2607திருமதி. விசாலாட்சி நடராஜா.
யா/க/2619திரு.விசுவலிங்கம் ஞானசுந்தரம்.
யா/க/2634திரு.வீரசிங்கம் கதிரிப்பிள்ளை.
யா/க/2659திரு.கந்தன் இராசு.
யா/க/2674திருமதி.மீனாட்சிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/2704திரு.முருகுப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/க/2713திருசின்னத்தம்பி அரியநாயகம்.
யா/க/2735திரு.கந்தையா தர்மலிங்கம்.
யா/க/2744திருமதி.சறோஜினிதேவி செல்வரட்ணம்.
யா/க/2782திரு.செல்லத்தம்பி துரைரத்தினம்.
யா/க/2783திரு.மாணிக்கம் சேனாபதி.
யா/க/2787திருமதி.இராசநாகேஸ்வரி விஜயசுந்தரம்.
யா/க/2804திருமதி.இராசம்மா சின்னையா.
யா/க/2844திரு.கந்தசாமி சுப்பிரமணியம்.
யா/க/2847திரு.கதிரிப்பிள்ளை அப்புலிங்கம்.
யா/க/2850திருமதி.அழகம்மா செல்லக்கண்டு.
யா/க/2854திரு.சின்னத்தம்பி சின்னராசா.
யா/க/2862திருமதி.வள்ளியம்மை முருகேசு.
யா/க/2865திருமதி.அசுவதி சபாபதி.
யா/க/2875திரு.வைரமுத்து பரம்சோதி.
யா/க/2876திருமதி.இராசம்மா நவரத்தினம்.
யா/க/2880திரு.வேலும் மயிலும்பரமநாதன்.
யா/க/2887செல்வி.தில்லைராணி பழனிப்பிள்ளை.
யா/க/2893திருமதி.சின்னம்மா கணபதிப்பிள்ளை.
யா/க/2899திரு.முருகேசு தாமோதரம்பிள்ளை.
யா/க/2927திருமதி.மேரிஅன்னமலர் யுவக்கிம்.
யா/க/2952திரு.சபாபதிரோய் காந்தராஜ்.
யா/க/2969திரு.சிதம்பரப்பிள்ளை கந்தசாமி.
யா/க/2976திரு.சரவணை சுப்பிரமணியம்.
யா/க/2998திரு.சின்னவன் ஆழ்வான்.
யா/க/3003திரு.செல்லையா வேலுப்பிள்ளை.
யா/க/3040திரு.குஞ்சாட்டி வேலாயுதம்.
யா/க/3046திரு.கந்தையா கணேசமூர்த்தி.
யா/க/3066திரு.சிற்றம்பலம்செல்வரட்ணம்.
யா/க/3115திரு.வல்லிபுரம் நல்லதம்பி.
யா/க/3152திரு.பேரானந்தம் உருத்திரன்.
யா/க/3194திரு.முருகேசு கந்தசாமி.
யா/க/3204திருமதி.கனகம்மா இராசரத்தினம்.
யா/க/3222திரு.மயில்வாகனம் பொன்னையா.
யா/க/3298திரு.சின்னையா சுப்பிரமணியம்.
யா/க/3300திரு.சின்னையாசுப்பிரமணியம்.
யா/க/3312திரு.தாமு அம்மாத்துரைகுலதேவன்.
யா/க/3313திரு.தாமோதரம்பிள்ளை பாலசுந்தரம்.
யா/க/3380திரு.ஆறுமுகம் தனபாலசிங்கம்.
யா/க/3383திருமதி.இராசம்மா தம்பிப்பிள்ளை.
யா/க/3400திருமதி.தங்கம்மா முத்தையா.
யா/க/3422திரு.கந்தவனம் கந்தசாமி.
யா/க/3459திருமதி.கனகம்மா நவரத்தினம்.
யா/க/3492திரு.தம்பையா சிங்கநாயகம்.
யா/க/3517திரு.குட்டித்தம்பி வீரசிங்கம்.
யா/க/3519திருமதி.தவமணி திருநீலகண்டர்.
யா/க/3529திரு.குட்டித்தம்பி தங்கராசா.
யா/க/3534திரு.சின்னப்புபாலகிருஷ்ணபிள்ளை.
யா/க/3571திரு.வீரகத்தி கதிரவேலு
யா/க/3572திரு.வல்லிபுரம் ஆறுமுகம்.
யா/க/3588திரு.கிருஷ்ணபிள்ளை தனபாலசிங்கம்.
யா/க/3629திரு.கதிரவேலுஇரத்தினசிங்கம்.
யா/க/3638திரு.கந்தவனம்முருகுப்பிள்ளை.
யா/க/3654திருமதி. சின்னப்பிள்ளை ஜீவரட்ணம்.
யா/க/3667திரு.சுப்பிரமணியம் சின்னத்தம்பி.
யா/க/3683திரு.வ.சின்னத்தம்பி நடராசா.
யா/க/3742திரு.சுப்பிரமணியம் தியாகராசா.
யா/க/3761திரு.செல்லையா நாகராசா.
யா/க/3769திரு.துரைச்சாமி கந்தவனம்.
யா/க/3777திருமதி.பாக்கியம் அரியகுட்டி.
யா/க/3783திரு.இராமலிங்கம் பொன்னம்பலம்
யா/க/3804திரு.தாமு சங்கரப்பிள்ளை
யா/க/3807திருமதி.தங்கம்மா முருகேசு.
யா/க/3860திருமதி.இராசம்மா கணபதிப்பிள்ளை.
யா/க/3861திருமதி தங்கமுத்துகணபதிப்பிள்ளை.
யா/க/3867திரு.ஆறுமுகம் சுந்தரம்.
யா/க/3878திருமதி. திரவியநாயகம் தனபாலசிங்கம்.
யா/க/3896திரு.முத்தையா சின்னத்தம்பி.
யா/க/3932திருமதி பூமணி செல்லத்துரை.
யா/க/3976திருமதி சரஸ்வதி கணேசன்.
யா/க/3995திருமதி புவனேஸ்வரி மகாதேவன்.
யா/க/4096திருமதி.யோகராணி இராசரத்தினம்.
யா/க/4113திரு.வல்லிபுரம் கந்தசாமி.
யா/க/4115திரு.சின்னப்பு தங்கவேல்.
யா/க/4117திரு.தில்லையர் யோகசாமி.
யா/க/4173திரு கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்.
யா/க/4203திருமதி.கமலாதேவி செல்வரத்தினம்.
யா/க/4213திருமதி.வள்ளியம்மை வல்லிபுரம்.
யா/க/4245திரு.கனகசபை சிவசுப்பிரமணியம்.
யா/க/4262திரு.தர்மலிங்கம் ஜீவானந்தன்.
யா/க/4293திரு.தம்பையா தணிகாசலம்.
யா/க/4308திருமதி.மகேஸ்வரி செல்லையா.
யா/க/4309திருமதி.அன்னலட்சுமி தேவானந்தம்.
யா/க/4335திருமதி.பத்மாவதி நவரட்ணசாமி.
யா/க/4348திரு.தம்பு செல்லத்துரை.
யா/க/4410திரு.வல்லி கிட்டினன்.
யா/க/4432திரு.சண்முகம் சோமசுந்தரம்.
யா/க/4485திருமதி.தங்கம் விநாசித்தம்பி.
யா/க/4495திரு.வேலுப்பிள்ளை சபாபதி.

(தொடரும்...)

# விற்பனை முகவர்களுக்கான அறிவித்தல்

தென்னிலங்கை நிறுவனங்களின் விற்பனை முகவர்களாக யாழ்.குடாநாட்டிலும், வன்னிப் பிரதேசத்திலும் செயற்படுவோர்களுக்கான ஒன்று கூடல் ஒன்று 05.11.2005 ஆம் நாள் (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு உதயநகர் மேற்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள நிதித்துறை வணிக ஒன்றியப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் தவறாது விற்பனை முகவர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிதித்துறை, வணிக ஒன்றியம்.

(சி.13137)

## அமரர் திருமதி செல்வபாக்கியம் முத்துச்சாமி அவர்களின்

# 3 ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு:-1935-04-22 இறப்பு:-2002-11-05

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் புதுக்குடியிருப்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

**திருமதி செல்வபாக்கியம்-முத்துச்சாமி**

திதி – 03.11.2005

ஆண்டுகள் பலவா யோடி
அவனியில் மறைந்திட் டாலும்
பூண்டரும் உறவின் நினைவு
பாரினில் வாழுமென்றும்
தூண்டா மணிவி ளக்காய்
துயர்களைந் தொளியை யூட்டி
மாண்பொடு வாழ்ந்த உன்னை
மறக்குமா எங்கள் உள்ளம்.

அன்புக்கணவர்,
சி. முத்துச்சாமி

தற்காலிக வதிவிடம்
'ஆதவன் இல்லம்'
2 ஆம் வட்டாரம்,
முத்துமாரி அம்மன் கோவிலடி
புதுக்குடியிருப்பு (6903)

# கிராமிய அபிவிருத்தி வங்கி

## பணிநிலை வேண்டுகை

கிராமிய அபிவிருத்தி வங்கியினால் கீழ் காணப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிநிலை**

01. வெளிக்கள அலுவலர்கள் (ஆண்கள்)

வயது:- விண்ணப்ப முடிவுத்திகதியில் 20 அகவையில் இருந்து 28 அகவைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை:- க.பொ.த.சாதாரணதரத்தில்இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஒரே தடவையில் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், தமிழ்,உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- $\frac{4650\text{-}6300\text{-}11050}{6x275+10x175+10x225} x2000$

02. அலுவலர் (ஆண்கள்)

வயது:- விண்ணப்ப முடிவுத்திகதியில் 20 அகவையில் இருந்து 28 அகவைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை:- க.பொ.த.உயர்தர பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3 பாடங்களில் திறமைச்சித்திக்கு குறையாதபெறுபேற்றினைக்கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம்:- $\frac{4750\text{-}7375\text{-}11875}{7x375+10x200+10x250} x2000$

விசேட தகைமை:-

(இரு பணிநிலைகளுக்கும்) தமிழீழத்தின் எப்பகுதிகளிலும் பணியாற்றக் கூடியவராகவும் வெளிக்கள கடமைகளிலும் ஈடுபடக்கூடிய உடற்தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அருகிலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையில் வேண்டுகைப் படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி

பொது மேலாளர்,
கிராமிய அபிவிருத்தி வங்கி
மத்திய செயலகம்,
கனகபுரம் பாடசாலை அருகாமை,
கிளிநொச்சி.

எனும் முகவரிக்கு 25.11.2005க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.


*பொது மேலாளர்,*
*கிராமிய அபிவிருத்தி வங்கி,*
*மத்திய செயலகம்.*

(சி.13200)

# 17 ஆம் ஆண்டு நினைவு | 15 ஆம் ஆண்டு நினைவு

## இவர்கள் வரலாற்று வாழ்வில் மீண்டும் பிறப்பெடுத்தவர்கள்





## லெப். குகன்

*(இளஞ்சிங்கம்–இளஞ்செழியன்)*
*(கரவெட்டி கிழக்கு)*
பிறப்பு:-1959.11.15 வீரச்சாவு:-1988.09.13

## மேஜர் சஞ்சிகா

*(சுந்தர்ராஜன்–கலைச்செல்வி)*
*(கரவெட்டி கிழக்கு)*
பிறப்பு:-1969.04.18 வீரச்சாவு:-1990.11.03

### தலைவன் குரலின் செயலானவர்கள்

உரிமை மீட்பிற்காய் உயிர்களைத்தந்தவர்கள்!
உலகத் திசைகளிலெம் உயர்வினை யுரைத்தவர்கள்!
எங்கள் வீட்டின் பூக்களாய் – பிள்ளைகளாயுதித்தவர்கள்!
வரலாற்று வாழ்வில் புயலாய் – பூகம்பமாய் பிறப்பெடுத்தவர்கள்!
தலைவனின் குரலுக்குச் செயல்வடிவம் ஆனவர்கள்.
போராட்டத்தின் பாதையைப் புரிந்து களம் போனவர்கள்.

தளர்வின்றிக் களமாடி தகுந்த பெயர் பெற்றார்.
மேஜர் சஞ்சிகா,லெப். குகனென மேன்மை நிலை உற்றார்.

உங்களின் நினைவெமக்கு, உவகைதான் தருகிறது!
ஆயினும் கண்களில் நீரும் எங்களுடன் வருகிறது!
வடியும் நீரதனை வழித்து எறிந்து விட்டு
வணக்க மலர்களை வைக்கிறோம் உம் பாதங்களைத் தொட்டு!

அழியா நினைவுடன்,
குடும்பத்தினர்.

த.மு:-இல.115
பாலிநகர், வவுனிக்குளம். (6904)

## Ministry of Healthcare, Nutrition and Uva Wellassa Development
## General Hospital (teaching) Jaffna
### போதனா வைத்தியசலை யாழ்ப்பாணம்
## Registration of suppliers and Servicers for year 2006
### 2006 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் வழங்குநர், சேவைகள் வழங்குநர் ஆகியோரைப் பதிவுசெய்தல்

Applications are invited from manufacturers, Suppliers, Sole Agents ,Registered Co-op- erative societies, Government Institutions, including statutory Boards, Relgistered Business, Organizations, individuals, who wish to register themselves with this institution for the supply of items and services listed below for the year 2006.

All applications should be sent under registered cover addressed to the Director, Teaching Hospital, jaffna with the top left hand corner of the envelope marked "Registration of suppliers and services 2006" to reach undersigned on or before 30 th November 2005 at 10.Am

**Conditions**

A Non Refundable Registration fee of Rs. 100.00 should be paid for each item and separate application to be submitted according to the supply / service. Money should be paid to this office and the receipt should be affixed to the application. (Cheques and money orders will not be accepted) applications can be made for one or more items coming below. (A) Supplies, (B) Services and (C) Vehicles by one applicant/ one Institute.But separate applications should be made for each item in the list, Appliction forms are available in this office.

Suppliers, service providers should be able to give one month credit.

When request for quotation is made registered suppliers, Service providers should quote the price for required supplies same. Director reserves the right to call quotation from external sours also. failure to quote and not effecting supplies and services in keeping with the standards will make the name of supplies to be deleted from the list.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2006 ஆண்டில் பொருட்கள் வழங்குநர்களையும். சேவை வழங்குநர்களையும் பதிவு செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள், அரச நிறுவனங்கள், அரச சபைகள், பதிவு செய்யப்பட்ட வியாபார தாபனங்கள், கூட்டுறவுச்சங்கங்கள் என்பனவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 'பணிப்பாளர், போதனா வைத்தியசலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.11.2005.அன்று மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாகஅனுப்பி வைக்கும்படி கோரப்படுகின்றனர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் குறியீடு (A)பொருட்கள் வழங்குதல் குறியீடு (B) சேவை வழங்குதல் குறியீடு (C)வாகன சுத்திகரிப்பு, திருத்தம் என்பனவற்றின் கீழ்வரும் ஒவ்வொரு வகையானவற்றிற்கும் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் 100/- ரூபா வீதம் எமது கரியாலத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, எம்மால் வழங்கப்படும் விண்ணப்படிவத்தை பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

பொருட்கள் வழங்குநர்களும் சேவைகள் வழங்குநர்களும் ஒரு மாத காலகடன் அடிப்படையில் பொருட்களையும் சேவைகளையும் வழங்கவேண்டும்.

கூறு விலை கோரும்போது பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களும், சேவை வழங்குநர்களும் தமது கூறுவிலைகளைக் கண்டிப்பாகக் குறிப்பிடவேண்டும். பணிப்பாளர் வெளியாரிடமிருந்தும் கூறுவிலை கோருவதற்கு உரிமை கொண்டிருப்பார் என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

### (A) SUPPLIES

01. Stationery Items with local and imported computer stationery, printed computer stationery. photocopy papers, C.R Books, ball point pens, Pencils, envelops items, Carbon papers, white papers, staplers, correcting fluids, stencils, diskettes magnetic tapes, computer materials, including printer ribbons and papers,diskettes, toner, cartridges, Glue cubes and liquidglue.
02.Furniture (Wooden)
03.Furniture (Steel)
4.Mats/Brooms and Ekel Brooms
5.Coir mattress and rubber mixed coir mattress (Rubberized)
6. All type linen items, mackintosh, and clothing items, Elastic and Nylon cords
7.All Aluminuim items and Household equipment.
8.Ceramics, Glassware Items
9.Paint, Varnish and floor polish,surgical spirit and Nail items
10.Washing soda, Cleaning Detergents, Vim, harpic, Saving blades and Matches
11.Building Materials
12.spare parts for all type of Vehicles.
13.Plumping Items P.V.C . pipe & etc.
14.all type of Batteries.
15. Leather and Leather products.
16. Hardware Items,pad lock, Galvanized, Bucket and Nails etc
17.Electrical Appliances Air Conditioners, Refrigerators, Ceiling fans & pedestal Fans, Bulbs etc
18.All type of Rexene and polythene items
19. Drugs and Milk food items
20. Rubber stamps items
21. Computers and related accessories
22.Dressing-Cloths matrial
23.Surgical Consumables
24.Surgical Instruments
25.Surgical Equipment
26.Dental Consumables
27.Laboratory Equipment
28.Carpentry items (All type of wood, planks, etc)

### (B) SERVICES

01.Repairs of steel furniture
02.Repairs of wooden furniture
03.Repairs of Electrical appliances (Air Conditioners, Refrigerators, & Deep Freezers, Repairs and Services of Typewriters, Calculators, Roneo machines, Computers and printers.)
04.Printing (All Type of forms
05.Repairs of surgical appliances X-Ray machine and all the hospital, equipment
06.Rewinding of Electrical motors,Fans & etc.
07.All kinds of Mechanical equipment services, Maintenance and repair
08.Gas/ oxygen equipment services and repair (Gas Burners and Gas cookrs)
09.water pump Sewerage Machine repairs and maintenance
10.Repairs of water supply and Toilet pipes
11.Disposal of Hospital Carbage
12. Sewing works
13.supply of official Identity card and rubber stamps
14.Repairs of Building

### (C)VEHICLES

1. All Repairs, services, Electrical works and cushions works all types of the Vehiclces .

**Dr.S.Raviraj.**
**Director.**
**General Hospital (Teaching) Jaffna** (சி.13252)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்
## நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

**சம்பளத்திட்டம்:-**

4430 -5530 / 10x110 +2700.00=7,130.00+சிறப்புக்கொடுப்பனவு 2,300.00=9,430.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 05.11.2005 ஆம் நாள் சனி காலை 09.00 மணி தொடக்கம் பகல் 01.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித் தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

* (பணியில் சிறப்பாகச் செயற்படுபவர்களுக்கு இச் சம்பளத்தினைவிட மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்)

முகாமையாளர்
ஆளணி ஆளுகைப் பகுதி
தமிழீழ போக்குவரவுக் கழகம்.
நடுவப் பணிமனை
விசுவமடு. (சி.13147)

## வெளியிணைப்பு இயந்திரம் இயலவிற்பனை

99 கோஸ் பவர் கொண்ட யமகா வெளியிணைப்பு இயந்திரம், 15 கோஸ் பவர் யமகா வெளியிணைப்பு இயந்திரம் 08 (எட்டு) அத்துடன் மூன்று உதிரிப்பாகத்திற்கு பயன்படுத் தக்கூடிய 9.9 சுசிக்கி வெளியிணைப்பு இயந்திரங்களும் முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இயல விற்பனை செய்யப்படவுள்ளது. இதனை விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் பார் வையிடலாம். இயல விற்பனை நடைபெறும் காலம் 11.11.2005 பி.பகல் 3.00மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இயலவிற்பனை செய்யப்படவுள்ளது.

தகவல்,
சி. மரியராசா தலைவர்
(சி.13258) முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்க சமாசம்.

## University of jaffna-Sri lankaU
## Faculty of Graduate studies

**Master of Arts in Regional planningprogramme**
**Academic Year 2005/06- Batch**

**New Admission**

**Applications are invited for the above fee levying course Admission Requirement:**
Admission is open to all graduates of any recognized university or those with any other qualifications and/ or experience, which would be acceptable to the Senate of the university of jaffna

**Duration**
one year
Lectures will be conducted in evenings on Weekdays and on Saturday and sunday
**Medium :** tamil
**Admission:**
Admission to the course will be made on the basis of an interview conducted by the University of Jaffna.

Application forms and other details may be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna either in person or by post on a payment of Rs.100/= per form. those who wish to abtain application forms by post are rquested to send a money order darwn in favour of the bursar, University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10cm in size. Application forms will be issued from 03.11.2005.to 15/11.2005

All completed applicaion forms should be forwarded to the Assistant Registar Faculty of graduate Studies University of Jaffna Thiruneively to reach on before 20.11.2005

Registrar
31/10/2005 (சி.13251)

# செல்சியா அணியைத் தோற்கடித்து விலகல் முறைப் போட்டிக்கு தகுதிபெற்றது பெட்டிஸ்

ஐரோப்பாவில் சம்பியன் கிண்ணத்துக்காக நடைபெறும் விலகல் முறைப் போட்டிக்குத் தகுதிபெறுமா என்ற அச்சத்தை பெட்டிஸ் உதைப் பந்தாட்ட அணி நிவர்த்தி செய்துள்ளது.

அண்மையில் செல்சியாஅணியுடனான போட்டியில் ஒன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் அடிப் படையில் அது வெற்றிபெற்றுள்ளது. ஆட்டம் ஆரம்பமாகி 28 ஆவது நிமிடத் தில்பெட்டிஸ் அணி யின் டேனி ஒரு கோலைய டித்தார். எனினும் செல்சியா வீரர் மைக்கல் எசின் ஆட்டத்தின் அரைப் பகுதியில் கோல் ஒன்றை அடித்த போதும் அது கோல் கம்பத்துக்கு மேலாக பந்து சென்றுவிட்டது.



இப்போட்டித் தொடரில் செல்சியா வீரர் அண்டர் லெக்ட்டுக்கு எதிராக ஐந்துமுறை மஞ்சள் அட்டை காட்டப்பட்டதால் (போட்டிவிதியின்படி) அவர் பெல்ஜியத்தில் நடைபெறும் அடுத்த போட்டியி லிருந்து நீக்கப்பட்டார்.

பெட்டிஸ் அணி விலகல் முறைப் போட்டிக்கு தகுதிபெறும் நோக்கில் ஆடி உறுதியான வெற்றியைப் பெற்றுவிட்டது. எனினும் அவ்வணி வீரர்களான நனோ, றிக்காடோ ஒரிடுவறியா இருவரும் காயத்துக்குள்ளாகியுள்ளனர்.



## போட்டியின்போது கைகலப்பு ஆர்ஜன்ரீனாவில் 17 பேர் பலி

ஆர்ஜன்ரீனாவில் நேற்று இடம்பெற்ற உள்ளூர் கால்பந்துப் போட்டி ஒன்றில் இடம்பெற்ற கைகலப்பில் 17 பேர் பலியாகியுள்ளதாக இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆர்ஜன்ரீனாவில் உள்ளூர் கால்பந்து போட்டிகளின்போது ரசிகர்களுக்கிடையில் கைகலப்புக்கள்இடம் பெறுவது வழமையான ஒன்றாக மாறிவிட்டது.






மான்செஸ்டர் நகரில் நடந்த 'பார்கிளேஸ் பிரீமியர்லீக்' கால்பந்துப் போட்டியில், மான்செஸ்டர் சிட்டி அணியின் ஆண்டி கோல் (இடது) அஸ்டன் வில்லா அணி வீரர்களை ஏமாற்றி மூன்றாவது கோலை அடிக்கிறார். இந்தப்போட்டியில் மான்செஸ்டர் சிட்டி 3 – 1 என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்றது..

# இங்கிலாந்தை வீழ்த்தும் சக்தி அக்தருக்கே உண்டு ஷர்பரஸ் நவாஸ்

இங்கிலாந்தை வீழ்த்தும் சக்தி அக்தருக்குத்தான் உள்ளது என்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஷர்பரஸ் நவாஸ். இங்கிலாந்து அணி தற்போது பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளும் மூன்று டெஸ்ட் ஐந்து ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளன. முதல் போட்டி வரும் 12 இல் முல்தானில் தொடங்குகிறது.




இந்தத்தொடரின் முதல் இரண்டு போட்டிக்கான பாக்.,அணியில் 'வேகப்புயல்' சொஹைப்அக்தர் இடம்பெற்றுள்ளார்.இவரை அணியின் வெற்றி நாயகன் என வர்ணிக்கிறார் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷர்பரஸ் நவாஸ்.

ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நவாஸ் நிருபர்களிடம் கூறுகையில், "இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அக்தர் முழு உடல்தகுதியுடன் பங்கேற்க வேண்டும் என்பதே எனது விருப்பம். இவர் தனது பலத்தை நிரூபித்தால் போதும். இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு அக்தரைத் தவிர வேறு எந்தப் பந்து வீச்சாளரும் அச்சுறுத்தலாக இருக்கப்போவதில்லை. அணியில் 35 வயதான முஷ்டாக் அகமதை ஏன் சேர்த்தார்கள் என்பது புரியவில்லை. இவர் வீசும் பந்து மெதுவாகத்தான் துடுப்பாட்ட வீரர்களைச் சென்றடையும். அதற்குள் அவர்கள் சுதாரித்துக்கொண்டு ஓட்டங்களைச் சேகரிக்கத் தொடங்கிவிடுவர்" என்றார்.

## நான்காவது போட்டி புனேயில் இன்று



இந்தப் போட்டியிலா வது இலங்கை அணி வெற்றி பெறுமா என்ற சிறிலங்கா ரசிகர்களின் அங்கலாய்ப்புக்கு மத்தியில் இன்று புனேயில் சிறிலங்கா-இந்திய அணிகளுக்கிடையிலான நான்காவது போட்டி நடக்கவுள்ளது.

இதற்காக புனே சென்றுள்ள இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்றுள்ள நிலையில் இன்று நடைபெறும் போட்டி சிறிலங்கா அணிக்கு வாழ்வா சாவா என்றுதான் கூறவேண்டும். இந்தப்போட்டியில் சிறிலங்கா தோற்றால் தொடரை இழந்துவிடும். மாறாக இந்திய அணி வென்றால் தொடரை கைப்பற்றிவிடும்.



சீனா, மகேபு நகரில் கிழக்காசிய விளையாட்டுப் போட்டிகளில், நேற்று முன்தினம் பெண்களுக்கான 100 மீ.,ஓட்டம் நடந்தது. இதில் சீனா கின் வங்பிங் (இடது) போட்டி தூரத்தை 11.66 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார். அருகில் ஜப்பான் வீராங்கனை சவோரி கிடகசே(நடுவில்), சீனாவின் சுயன், இவர்கள் முறையே நான்காவது மூன்றாவதுஇடத்தைப் பிடித்தனர்.

## இலங்கை-இந்திய ஐந்தாவது போட்டிக்கும் அதிக பாதுகாப்பு வழங்கத் திட்டம்

இந்திய-சிறிலங்கா அணிகள் மோதும் ஐந்தாவது ஒரு நாள் போட்டிக்கும் அதிக பாதுகாப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையே ஐந்தாவது ஒரு நாள் போட்டி வரும் ஆறாம் திகதி ஆஹமதாபாத்தில் நடக்கவுள்ளது. டில்லி குண்டு வெடிப்பு மற்றும் தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக இந்தப் போட்டியிலும் கடுமையான பாதுகாப்பு வழங்க குஜராத் அரசு முடிவு செய்துள்ளது.

இந்தப்போட்டி குறித்து குஜராத் கிரிக்கெட் சங்க செயலாளர் நர்ஹரி அமின் கூறுகையில், "இரண்டாவது முறையாக ஆஹமதாபாத் சர்தார் படேல் மைதானத்தில் பகலிரவுப்போட்டி நடத்தப்படுகிறது. இரவு நேரத்தில் நடப்பதால் எந்த அசம்பாவிதமும் நடக்காத வகையில் பாதுகாப்பைப் பலப்படுத்த முடிவு செய்துள்ளோம். 1400 பொலிஸ் மற்றும் சிறப்பு பாதுகாப்பு வீரர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். போட்டியை அனைவரும் காணும் விதத்தில் குறைந்த விலையில் பற்றுச்சீட்டுக்களை விற்க முடிவு செய்துள்ளோம் "என்றார்.





கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு கழகத்தினரால் மாவீரர் தினத்தை முன்னிட்டு கனகபுரம் கிராம மாவீரர்களின் ஞாபகார்த்தமாக நேற்று முன்தினம் சிநேகபூர்வமான உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம், மென்பந்தாட்டப் போட்டிகள் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. போட்டியில் கலந்துகொண்ட அணியினரைப் படத்தில்காணலாம். (படம் -சோதி)

# இறுதிப் போட்டியில் ஸ்கந்தா– உழவர் ஒன்றிய அணி தகுதி





கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச்சபை நடாத்தி வரும் கரைச்சிப்பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கால்பந்து லீக் போட்டியின் இறுதிப் போட்டிக்கு ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியும், உருத்திரபுரம் உழவர் ஒன்றிய அணியும் தகுதிபெற்றுள்ளன. கடந்த திங்கள் நடைபெற்ற கடைசி லீக்போட்டியில் ஸ்கந்தா அணியை 3-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த உழவர் ஒன்றியம் மேற்படி தகுதியைப் பெற்றது.

ஸ்கந்தா அணி ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியிருந்தது. இத்தொடரின் இறுதிப் போட்டித்திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவினர் அறிவித்துள்ளனர்.



## சிந்தனைக்கு

போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 03.11.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# மதிப்பீடு சரியானதே!

சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நாளில் அரசபடைகளுடன் சேர்ந்தியங்குவதாகக்கூறப்படும் குழுக்களினால் கிழக்கில் பாரிய வன்முறைகள் நிகழக்கூடும் என்ற ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புகுழுவின் கவலையானது அரசியல் களத்தை அவை தெளிவாக விளங்கிக்கொண்டுள்ளதன் வெளிப்பாடு என்றே கொள்ளுதல்வேண்டும்.

சிறிலங்கா தேர்தல் களமானது வன்முறைமிக்கதாக வளர்ச்சி கண்டுவந்தமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. அதாவது ஒரு இன மக்கள் கூட்டத்தை அடக்கி ஒடுக்குவதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவும்,தக்க வைக்கவும் முனைபவர்கள் அதே ஆட்சி அதிகாரத்திற்காக இந்நடவடிக்கைகளைத் தமது இனமக்கள் கூட்டத்தின் மீதும் பிரயோகிக்கவும் தயங்கப்போவதில்லை.

அதாவது அதிகாரத்திலுள்ளவர்களுக்கு சிறுபான்மையினரை ஒடுக்குவதன் மூலம்தான் பதவிக்கு வரமுடியும் என்றல்ல, பெரும்பான்மை இனத்தின் ஒரு பகுதியினரை ஒடுக்குவதன் மூலமும் பதவிக்கு வரலாம். ஆட்சியைத்தக்க வைக்கலாம் என்ற நிலை இருப்பின் அவர்கள் அதையும்மேற்கொள்ளத்தயங்கப்போவதில்லை.

ஆகையினால் ஆட்சி அதிகாரப் போட்டியில் எவர் மீதும் வன்முறை பிரயோகிக்கப்படலாம். இந்நிலையில் இம்முறை சனாதிபதித் தேர்தலானது கடும் போட்டி நிலவக்கூடியதாக இருக்கமென மதிப்பீடுகள் தெரிவிக்கையில் வன்முறைகளும் மிக அதிகரித்த வகையில் இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தவகையில் பெருமளவில் வன்முறைக்கு உள்ளாகும் என எதிர்பார்க்கப்படும் பகுதியாக கிழக்கு மாகாணமே அதிலும் குறிப்பாக, மட்டு--அம்பாறை மாவட்டங்களே உள்ளன. ஏனெனில், இம் மாவட்டங்களிலேயே யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருக்கின்றபோதும் தொடர்ந்து வன்முறைகள் இடம்பெற்று வருவதும் மரணங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் உள்ளது.

மட்டு.அம்பாறை மாவட்டங்களில் இன்று நடைபெற்றுவரும் வன்முறைகளுக்குக் காரணம் சிறிலங்கா இராணுவமும் அதனுடன் இயங்கும் இனவிரோத சக்திகளும் என்பது வெளிப்படையானது. போர் நிறுத்த உடன்பாட்டை சிதைத்துவிடச் செய்யும் வகையில் அவற்றின் செயற்பாடு உள்ளது. இது இனப்பிரச்சினையுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தெரிந்ததொன்றே.

இதன் வெளிப்பாடே ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் கோரிக்கைகளாகும். ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இதனைக் கருத்திற் கொள்ளவில்லை. மாறாக ஆயுதக் குழுக்களை பேணுவதிலேயே அக்கறை கொண்டுள்ளன.

இவ் ஆயுதக் குழுக்களைத் தற்பொழுதுள்ள ஆட்சியாளர்கள் தான் உருவாக்குகின்றனர், வளர்கின்றனர் என்பதல்ல. கடந்த கால ஆட்சியாளர்களில் இருந்து தற்போதைய ஆட்சியாளர்கள் வரையில் இதனைப்போது நியதியாகவே கையாண்டு வந்துள்ளனர். அதாவது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக இவ் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்துவதே அவர்களின் நோக்கங்களில் முக்கியமானதாகும்.

ஆனால் இதற்கு அப்பால் ஆயுதக்குழுக்களை ஆட்சியில் உள்ளவர்கள் தமது சொந்தத் தேவை போன்ற வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தியும் வந்துள்ளனர். இந்த வகையிலேயே இன்று ஆட்சியில் உள்ளவர்கள் இவ் ஆயுதக் குழுக்களை தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட முனையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாகவே கிழக்கில் இத்தகைய வன்முறைகள் இடம் பெற வாய்ப்புண்டு என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் இவ் வன்முறைகள் அதிகரிக்கலாம் என ஐரோப்பிய ஒன்றியம் முடிவுக்கு வந்துள்ளமை சரியானதே. அதாவது கிழக்கில் வன்முறைக் களம் ஒன்றை உருவாக்க பெரும் வாய்ப்புக்கள் உள்ளன. ஏனெனில் கிழக்கு மாகாணமே பதற்றம் மிக்கதாகவும், குழப்பங்களை உருவாக்கிவிட்டு தமிழர் தரப்பில் குறிப்பாக விடுதலைப்புலிகள் மீது பழிகளைப் போட்டுவிடுவதற்கும் வாய்ப்பான பகுதியாகவுள்ளது. இதனைத் தவிர தேர்தலில் காத்திரமான பங்கு வகிக்கக்கூடிய கிழக்கு மாகாணத்தில் வாக்களிக்க முடியாத நிலையையும் உருவாக்கிவிட முடியும்.

இந்த வகையில் சனாதிபதித் தேர்தலின் போது கிழக்குப் பிரதேசத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படக்கூடிய ஏதுநிலை முழு அளவில் காணப்படுவதான ஐரோப்பிய யூனியனின் எச்சரிக்கையானது தவறற்றதொன்றே. ஆகையினால் கிழக்கு மாகாண மக்கள் இது குறித்து விழிப்பாக இருத்தல் அவசியமாகின்றது. ஏனெனில் சிங்கள தேசத்தின் அரசியல்வாதிகள் அதிகாரத்திற்காகத் தமிழ்மக்களை தமிழ் ஆயுதக் குழுக்கள் மூலமே பலியிடத் தயங்க மாட்டார்கள்.

# சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்கு கட்சிச் சின்னங்களை மட்டும் பயன்படுத்த அறிவுறுத்து

(கொழு)

அரசியல் கட்சிகளின் சின்னங்கள் தவிர வேறு எந்தவொரு சின்னத்தையும் பயன்படுத்தி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிக்க வேண்டாம் என்று தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

அரசியல் கட்சிகள் பல்வேறு சின்னங்களைப் பயன்படுத்திப் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதனால் தேர்தல் ஆணையாளர் இந்த முடிவினை எடுத்துள்ளார்.

தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள், வேட்பாளர் பயணம் செய்யும் வாகனங்கள் தவிர வேறு இடங்களில் பல்வேறு சின்னங்களைப் பயன்படுத்தி தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கெதிராக செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல் ஆணையாளர் பொலிசாருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இம் முடிவின்படி சால்வை மற்றும் தாமரைப்பூ போன்றவற்றைப் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் அரசியல் கட்சிகள் தங்கள் கட்சியின் தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## வாக்காளர் அட்டைகள் மலையகத்தில் பறிமுதல்!

மலையகத்தில் வாக்காளர் அட்டைகள் பறிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் குறித்து தோட்டமக்கள் கவனத்துடன் செயற்படுமாறு பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் எம். சச்சிதானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் நோக்கில் சில விஷமிகள் இவ்வாறு செயற்படுவதாகவும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக மக்களிடம் அவர்களது வாக்காளர் அட்டைகள் பறிக்கப்படுவது குறித்து தகவல்கள் கிடைத்தால் உடனே அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கோ அல்லது தேர்தல் ஆணையாளருக்கோ அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# மகிந்தவை வெற்றிபெறச் செய்தால் நாடு மீண்டும் யுத்தத்திற்குத் தள்ளப்படும்

## முன்னாள் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெறச்செய்வதன் மூலம் நாட்டை மீண்டும் யுத்தத்திற்குள் தள்ளுவதற்கு சோமவன்சவும், வீரவன்சவும் முயற்சி செய்கிறார்கள் என முன்னாள் இராணுவப் பேச்சாளரும், பொல்காவல தேர்தல் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளருமான ஜெனரல் சரத் முனசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஓமந்தை பற்றி ஒன்றுமே தெரியாத இவர்கள் இராணுவம் குறித்து பேசுகின்றனர். இராணுவத்தைப் பற்றிப் பேச இவர்களுக்கு என்ன தகுதி இருக்கின்றது.

புலனாய்வுத்துறை அதிகாரி லெப்டினன் கேணல் மீடினின் கொலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். புலனாய்வுத்துறை அதிகாரி முத்தலீப் கொலை செய்யப்பட்டார், பின்பு வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கொலை செய்யப்பட்டார். அவரின் கொலையை அடுத்து விசாரணைக் குழு ஒன்றை அமைக்குமாறு ரணில் விக்கிரமசிங்க கோரியிருந்தார். அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால் தான் மற்றுமொரு புலனாய்வு அதிகாரி கொல்லப்பட்டுள்ளார்.

மகிந்தவின் உறவினரொருவர் முன்னர் இராணுவத்தில் கடமையாற்றி பின்பு அமெரிக்கா சென்று தற்போது நாடு திரும்பியுள்ளார். இவர் தற்போது இராணுவ முகாம்களுக்குச் சென்று மகிந்தவிற்காக பரப்புரை செய்கின்றார். இதற்கு அனுமதியளித்தது யார்? இவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? இவர்களின் போலி பரப்புரைகளினால் படையினர் ஏமாந்து விடக்கூடாது என்று மேலும் தெரிவித்தார்.

# ஐந்து ஊடக அமைப்புக்கள் இணைந்து ஊடக கொள்கைகள் உருவாக்கம்!

(கொழும்பு)

ஊடக அமைப்புகள் ஐந்து இணைந்து ஊடக கொள்கைகளை உருவாக்கியுள்ளன.

ஊடகத்துறையை ஊக்குவித்தல், ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்பு, தொழில் உறவுகள், ஊடகவியலாளர்களின் உரிமைகள் என்பவற்றை கருத்தில் கொண்டு இந்தக் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தொழில்சார் பத்திரிகையாளர்கள் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்,இலங்கை முஸ்லிம் ஊடக ஒன்றியம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் என்பன இணைந்து நாடு முழுவதிலும் உள்ள ஊடகவியலாளர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து இந்தக் கொள்கைகளை தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மூன்று அரச திணைக்களங்கள் விரைவில் தனியார் மயமாகும்!

(கொழும்பு)

சுங்க திணைக்களம், தேசிய வருமான வரித்திணைக்களம், காலால் திணைக்களம் போன்றவற்றை தனியார் மயப்படுத்த திட்டமிடப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த மூன்று திணைக்களங்களையும் ஒன்றிணைத்து அதிகார சபை ஒன்றை அமைப்பது குறித்த யோசனைக்கு தாம் ஆரம்பத்தில் இருந்தே எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக தேசிய வருமான வரித் திணைக்களத்தின் ஊழியர் சங்கம் தெரிவிக்கின்றது.

எனினும் தேசிய வருமான வரித் திணைக்களத்தை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்கு தமது சங்கம் ஆதரவு வழங்கியதாக அந்த சங்கத்தின் இணைச் செயலாளர் எச்.ஏ. எஸ்.உதயசிறி தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் தேசிய வருமான வரி அதிகார சபைக்கு இணையான நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

தேசிய வருமான வரித்திணைக்களம், சுங்க திணைக்களம், காலால் திணைக்களம் போன்ற அரசாங்கத்திற்கு வருவாயை ஈட்டிக்கொடுக்கும் திணைக்களங்களை தனியார் மயப்படுத்த ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார். (32)

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்க சட்டங்கள் மீளாய்வு

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் சட்டங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளது. சமூக நலன்புரி அமைச்சு தகவல் தருகையில்:வடக்கு, கிழக்கில் கரையோரத்தில் இருந்து 50 மீற்றருக்கு அப்பால் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐயாயிரம் ரூபா விசேட கொடுப்பனவு உட்பட சகல கொடுப்பனவுகளையும் வழங்குவதென்று தீர்மானித்துள்ளது. ஏனைய பகுதிகளில் கரையோரத்தில் இருந்து 35 மீற்றருக்கு அப்பால் வாழும் பாதிக்கப்பட்டவர்களும் இதனைப் பெறவுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக மீளாய்வு விண்ணப்பங்களை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளருக்கோ அல்லது அமைச்சுக்கோ அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லெப். கேணல் ராகவன் நினைவுகளுடன்

# போர்ப் பயிற்சிக் கல்லூரியில் சிறப்பு நிகழ்வு



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து 02-11-1999 அன்று ஒட்டுசுட்டான் பகுதியில் நடைபெற்ற ஓயாத அலைகள் - 3 இன் ஆரம்ப கட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரன் லெப். கேணல் ராகவன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் லெப். கேணல் ராகவன் ஞாபகார்த்த தாச்சிச் சுற்றுப் போட்டியும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான காண்டீபன் தலைமையில் நடைபெற்றது.

முதலில் பொதுச்சுடரினை கடற்புலிகளின் பொறுப்பாளர்களில் ஒருவரான இனியவன் ஏற்றிவைக்க தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை வடபோர் முனைக் கட்டளைப் பணியகத்தின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் முகுந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் ஏற்றிவைக்கத் தொடர்ந்து லெப். கேணல் ராகவனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை படையணியின் முதன்மை ஆசிரியர் தென்னரசனும், லெப். கேணல் நியூட்டனின் திருவுருவப்பட்டத்திற்கான ஈகச்சுடரினை பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவைச் சேர்ந்த தர்சிகாவும், பொது மாவீரர் படத்திற்கான ஈகச்சுடரினை படையணியின் நிதிப் பொறுப்பாளர் புகழரசனும் ஏற்றினர். தொடர்ந்து மலர் வணக்கம். அகவணக்கத்தினைத் தொடர்ந்து நினைவுரையினை படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான ரமணனும் சிறப்புரையினை கட்டளைப் பணியகத்தைச் சேர்ந்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் லோரன்சும் ஆற்றினர்.

தொடர்ந்து கவிதையினை போராளிகளான குமுதன், கில்மன் ஆகியோர் வழங்கினர். தொடர்ந்து ராகவன் ஞாபகர்த்த தாச்சிச் சுற்றுக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் படையணியின் விளையாட்டுப் பொறுப்பாளர் பாவலன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக படையணியின் வடமுனை அணி, மத்தி அணி, விசேட கொமாண்டோ அணி, தென்முனை அணி ஆகிய அணிகளுக்கிடையே போட்டிகள் நடைபெற்று வடமுனை அணியும், விசேட கொமாண்டோ அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டியில் விசேட கொமாண்டோ அணி வெற்றிபெற்று ராகவன் ஞாபகார்த்த தாச்சிச் சுற்றுக் கிண்ணம் 2005ஐ சுவீகரித்துக்கொண்டது.

வெற்றிபெற்ற அணிக்கான வெற்றிக் கிண்ணத்தினை வடபோர் முனை கட்டளைப் பணியகத்தின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் லோரன்சும், பரிசில்களை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதி லெப். கேணல் கோபித்தும் வழங்கி வைத்ததுடன் நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது. இந்நிகழ்வில் போராளிகள், தளபதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மீளளிப்பு..

மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண் பித்தே கடனை மீளப்பெற முடியும்.

அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5 அங் x 2.0 அங் .அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகிய வற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

கடன் சான்றிதழைத் தவறவிட்ட வரின் கையொப்பத்தை உறுதிப் படுத்திக் கிராமசேவையாளர் வழங்கிய கடிதம்.

கடன் சான்றிதழாளரும் மறு உரித்தாளரும் இறந்திருப்பின் சட்ட முறையான உரித்தாளருக்கு மீளளிக் கப்படும். சட்டமுறையான உரித்தாளர் ஒருவருக்கு மேற்படின் உரித்துடைய அனைவருக்கும் சேர்த்து வழங்கப் படும். உரித்துடையோரில் எவராவது ஒருவர் ஏனையோரின் எழுத்து மூலமான ஒப்புதலுடன் மீளப்பெற்றுக் கொள்ளலாம் அவ்வொப்புதல் கிராமசேவையாளராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத் தப்பட வேண்டும். சட்ட முறையான உரித்தாளர் யார் என்பதை முறைப் படி உறுதிப்படுத்தும் கீழ்வரும் ஆவணங்களின் நிழற்படிகளை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் ஆவணங்கள் ஆய்வுக்குட்படுத் தப்பட்டு முறையானவையென ஏற்கப்படின் பிறிதொரு நாளில் மீளளிப்புச் செய்யப்படும்.

கடன் சான்றிதழாளரின் இறப்புச் சான்றிதழ்

மறு உரித்தாளரின் இறப்புச் சான்றிதழ்.

இரண்டினதும் நிழற்படி

கடன் சான்றிதழ்.

கடனை மீளப் பெறவுள்ளவரின் அடையாள ஆவணம்.

கடனைப் மீளப்பெறவுள்ளவரின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்

மறு உரித்தாளரின் சட்டமுறை யான உரித்தாளர் எத்தனை பேர் என்பதையும் யார் யாரென்பதையும் உறுதிப்படுத்திக் கிராமசேவை யாளரும் உதவி அரசாங்க அதிபரும் வழங்கிய கடிதம்.

## இராணுவ..

டிருந்தது.

இப்பரிந்துரையையே சிறிலங்கா அரசால் நிராகரிக்கப்பட்டதாகும். இது குறித்து வெளியாகியுள்ள செய்திக் குறிப்பொன்றில், சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் தமிழ்க் குழுக்களை வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றுமாறு சிறிலங்கா அரசிற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பின் பொறுப்பாளர் ஸ்டீன் ஜோர்ஜெய்சன் அளித்த பரிந்துரை சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிழக்கிலிருக்கும் தமிழ் உளவாளிகள் வலையமைப்பை முழுமையாகச் செயலிழக்கச் செய்யும் விடுதலைப்புலிகளின் தேவைகளுக்கேற்பவே இந்த அதிகாரி செயற்படுவதாக இராணுவ உளவுப்பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் உளவாளிகள் மூலமாகவே வடக்குக் கிழக்கில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை தாங்கள் அறிந்துவருவதாகக் கூறிய அந்த அதிகாரி இராணுவப் புலனாய்வுப் பிரிவை சீருகுலைக்க இப்படியான திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## நான்கு..

நேற்று அதிகாலை வீசப்பட்ட இக்கைக்குண்டு காவலரணுக்கு சமீபமாக வீழ்ந்த போது அது வெடிக்காத காரணத்தால் பாதிப்புக்கள் ஏற்படவில்லை. உந்துருளி ஒன்றில் வந்த இனம் தெரியாதவர்களே இக்கைக்குண்டை வசிவிட்டுத்தப்பிச் சென்றுள்ளதாக இராணுவத்தினர் கூறினர். (27,33)

## அரச...

விடயத்தில் நீங்கள் தலையிட்டு தேர்தல் பரப்புரைகளை ஒளிபரப்புவ தில் அரச ஊடகங்கள் ஜனநாயக பூர்வமாக செயற்பட அறிவுறுத்த வேண்டுகின்றோம். இதுதொடர்பில் நீங்களும் அக்கறை கொண்டிருப்பதாக நாம் நம்புகின்றோம்.

எம்முடைய தேர்தல் பரப்புரைகள் தொடர்பான ஒளிபரப்புக் களை விட சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் ஒளிபரப்புக்கள் அதிகம் இடம் பெறுவதை சுயாதீனக் கண்காணிப்புக் குழுவினர் குறிப் பிட்டுள்ளனர். எமது அடிப்படை மனித உரிமையான இது விடயத்தை செயற்படுத்த நீங்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று ரணில் கூறியுள்ளார்.

## மக்கள்...

ஆனால் எமது தலைவர் புதுத்திட்டங்களை வகுக் கின்றார். இவ்வாறு ஜெயசிக்குறுவை வழிமறித்திருந்த கட்டத்தில்தான் தலைவர் ஒருதிட்டத்தை வகுக்கின்றார். போர்வீரர்கள் போதாதென்றால் மக்களுக்கு பயிற்சியை வழங்கி அவர்களை காப்பரண்களில் நிறுத்திவிட்டு போராளிகள் உள்ளே இறங்கி பிரதேசங்களை. கைப்பற்ற லாம் எனத்திட்டத்தை வகுத்தார். இதன்படி எமது படைகள் குறைந்து கொண்டிருந்த போது மக்கள் பக்கபல மாக வந்துநின்று எமக்கு தோள் கொடுத்தார்கள். இதன்படி தலைவர் ஓயாத அலைகள் -03ஐ ஆரம்பிக்கின்றார்.

சண்டை ஆரம்பிக்கப்படுகின்றது ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே வித்தியாசமான திட்டமிடலின்படி கரும்புலிகள் அணி உள்ளே நகர்த்தப்பட்டு விசேடமான வேவுஅணிகள் உள்ளே நின்று தகவல்கள் தந்தன. ஏனைய அணிகள் களமுனைக்கு நகர்த்தப்பட்டு சண்டை ஆரம்பிக்கப்பட்டது. அந்தச் சண்டையிலே சமர் ஆரம்பமா கிய இந்த ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மட்டும்தான் கூடுதலாக எதிர்த்து நின்று எமது வீரர்கள் எதிரியை அழித்தார்கள். ஏனைய பிரதேசங்களிலிருந்த இராணுவம் ஒட்டுசுட்டானிலிருந்து ஓடிய இராணுவத்தின் ஓட்டங்களை அறிந்து அவற்றைப் பார்த்துப் பார்த்து வவுனியாவரை ஓடியவர்களின் ஓட்டத்தூரமே அதிகம். ஒட்டுசுட்டானி லிருந்து ஓடிய இராணுவம் கரிப்பட்ட முறிப்பை நோக்கி ஓடினான். அங்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்து மாங்குளத்தை நோக்கி ஓடினான். ஆனால் மாங்குளத்தில் சண்டை நடக்கவில்லை. கரிப்பட்டமுறிப்பு ஒலுமடு பகுதியிலிருந்து ஓடிய இராணுவத்தை பார்த்ததும் மாங்குளத்து ஆமி ஓடிவிட்டான். மாங்குளத்து ஆமியின் ஓட்டத்தைபார்த்து மன்னகுள இராணுவம் அவர்களுக்கு முன்னே ஓடியது இதைப்பார்த்த கனகராயன்குள முகாம் ஆமி கரும் புலிதாக்குதலின் திகைப்போடு ஓட்டமெடுத் தான் அதனுடன் புதூர்சந்தி, புளியங்குளம், வினக்கு வைத்த குளமென ஓடிய இராணுவத்தைக் கண்டு ஓடியவர் கள் தான் அதிகம். இதிலிருந்து ஒன்றை விளங்க முடிந்தது. அதாவது சிறிலங்கா இராணுவத்தின் மன வலிமைக்கும் எமது வீரர்களின் மன வலிமைக் மிடையேயான வித்தியாசத்தை அந்த வீரர்களின் சாதனை யால்தான் நாங்கள் இன்று அமைதியாக இந்த நிகழ்வு களை நடத்திக்கொண்டிருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (ச.தீ,05)

## ஓயாத அலைகள்...

வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவு கூரும் திருவுருவப்படத் திற்கு முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் சுடர் ஏற்ற, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம் மலர் மாலை அணிவித்தார். லெப்.கேணல் ராஜன் கல்விப்பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தியின் தலைமையில் தொடர்ந்து நடை பெற்ற அரங்க நிகழ்வில் சங்கநாதக் குழுவினரின் சிறப்பு நடன, நாடக நிகழ்வுகள் இடம் பெற்றன. அடுத்து சிறப்புரையினை தளபதி ரமேஸ் நிகழ்த்தின

அடுத்து ஓயாத அலைகள்-03இல் காவியமான கரும்புலிகளை நினைவு கூரும் உரையினை போராளி துளசிச்செல்வன் நிகழ்த் தினார். தொடர்ந்து ஓயாத அலை-03 வெற்றிச் சமர் களம்பற்றியும் மாவீரர்கள், போராளிகளின் தியாகங்கள் பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட தலைமைச் செயலக பொறுப்பாளர் சுரேஸ் உரை நிகழ்த்தினார்.

அடுத்து சிறப்பு நிகழ்வாக லெப் கேணல் ராஜன் கல்விப்பிரிவினரால் உருவாக்கப் பெற்ற நெருப்பினுள் நின்று எனும் கவிதை நூல் வெளியிடப்பட்டது. பல மாவீரர்களால் ஏற்கனவே உருவாக்கப் பெற்ற கவிதைகளையும் ஏனைய போராளிக் கலைஞர்கள், கவிஞர்களின் கவிதைகளையும் தாங்கிய இன் நூலின் முதற் பிரதியினை தளபதி கேணல் ஜெயம் வெளியிட்டு வைத்தார். அடுத்து பிரதிகளை சோதியா படையணி தளபதி கேணல் துர்க்கா, தளபதி வீரமணி, தளபதி பிரபா, விக்டர் கவச எதிர்ப்புப் படைப்பணி தளபதி அக்பர், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் வழங்கினர். சிறப்புப் பிரதியினை தளபதி ரமேஸ் வெளியிட்டு வைக்க, மாலதி படையணி தளபதி கேணல் விதுசா பெற்றுக் கொண்டார்.

அடுத்து நூலின் மதிப்பீட்டுரை யினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே பாலகு மாரன் நிகழ்த்த, நூல் அறிமு கவுரையினை தமிழீழ தேசியத் தொலைக் காட்சி நிறுவன பணிப் பாளர் கருணாகரன் நிகழ்த்தினார்.

லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவு பொறுப்பாளர் கீதனின் தலை மையில் இவ்வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

வெகு சிறப்பாக உணர் வெழுச் சியுடன் நடைபெற்ற இவ் வெற்றி விழா நிகழ்வில் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் மற்றும் விடுதலைப்புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மாணவர்கள், ஆசிரியர் கள், பொதுமக்கள், அரச அரசசார் பற்ற நிறுவனப் பணியாளர்கள் எனப் பெருந் திரளானோர் கலந்து கொண்டனர். (ச.தீ,05)

## சாவு அறிவித்தல்



### இராமநாதன் நாகரத்தினம்

**பாண்டியன் வாணிபம்**

**ஊர்தி விற்பனைப் பகுதி ஊழியர்**

இராமநாதன் நாகரத்தினம் (மெய்யம்ஐயா) இவர் நேற்று (02.11.2005) காலமானார். அன்னார் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும் நவரத்தினராசா, இரத்தினகுமாரி, சிவம், ஜெயம், விஜயராசா, விஜயகௌரி ,குட்டி ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தா, வரதராசா, கீதா, ஜெயந்தி, குட்டி ஆகியோரின் மாமனாரும் சர்மினி, சயந்தினி, கீர்த்தன், கீர்த்திகா, விதுஷா, விதுஷன், நிதுஷன், டிலக்சன், யதுசிகா, யதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியை 03.11.2005 இன்று நண்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று திருநகர் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சொ.மு:-
இல:144, பால்ப்பன்னை றோட்,
திருநெல்வேலி.

த.மு
V.M.P மில்,
கரடிப் போக்கு,
கிளிநொச்சி.

தகவல்:-
மருமகன் வரதன்

(சி.6906)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.